பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 26 | வெள்ளிக்கிழமை (09-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 141

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# தேசிய பாதுகாப்புக்கருதி சதீஸ் நம்பியாரின் அறிக்கை வெளியிடப்படமாட்டாது

## பாராளுமன்றில் பிரதமர் அறிவிப்பு

(நமது பாராளுமன்ற நிருபர்)

**நாட்டின் தேசிய பாதுகாப்பு நலன் கருதி முன்னாள் இந்திய இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான அறிக்கையை அரசாங்கம் வெளியிடமாட்டாது. அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்து என்னால் எதுவும் கூறமுடியாது உள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுப் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

சமாதான முயற்சிகள் தொடர்பாக கடந்த செவ்வாய்க்கிழமை ஆற்றிய உரை மீதான விவாதத்தை முடித்துவைத்து பேசும்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, தமிழ் தேசிய கூட்டமைப்பு இரா. சம்மந்தன் மற்றும் லக்ஸ்மன் கதிர்காமர், விமல் வீரவன்ச ஆகியோர் உரையாற்றிய பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா விவாதத்தை முடித்துவைத்து உரையாற்றினார். அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் தேசிய பாதுகாப்பு நலன் கருதி சதீஸ் நம்பியாரின் அறிக்கையை வெளியிடவோ அது தொடர்பான கருத்துக்களை

(10ம் பக்கம் பார்க்க)

# கடற்புலிப் படையணி கடலில் சுதந்திரமாக நடமாட வேண்டும்

## எரிக்சோலிடம் பாலா எடுத்துரைப்பு

(கிளிநொச்சி)

அரசாங்கம் உடனடியாக ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்காவிட்டால் சமாதான பேச்சுவார்த்தையை தொடர்ந்தும் இடைநிறுத்துவதுடன் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் யூன் மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டிலும் கலந்துகொள்ள மாட்டோம் இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹேய்மிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் நடுவப்பணியகத்தில் எரிக் சொல்ஹேய்மை சந்தித்துவிட்டு விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு எடுத்துக் கூறினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

நடந்து முடிந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்படாமையை பிரதமர் ஒப்புக்கொண்டிருக்கிறாரே ஒழிய உருப்படியான செயற்பாடுகள் எதனையும் அவர் செய்யவில்லை என்பதை நோர்வே பிரதி நிதிகளுக்கு நாம் தெளிவுபடுத்தி உள்ளோம். இந்நிலையில் அரசு உடனடியாக ஆக்கபூர்வமான முடிவுகளை எடுக்க வேண்டும் அத்தகைய முடிவுகளை அரசு எடுக்கத் தவறுமானால் எமது முடிவில் நாம் தொடர்ந்தும் உறுதி

(10ம் பக்கம் பார்க்க)

# புலி உறுப்பினர்கள் இருவர் கடற்படையினரால் கைது

## திருமலைக்கடலில் சம்பவம்

(திருகோணமலை)

திருகோணமலைக் கடற்பரப்பில் 10கிலோ வெடி பொருட்களுடன் சென்ற விடுதலைப்புலிகளின் படகொன்று நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளது.

படகில் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்கள் மூவரில் இருவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய மேற்படி படகை கடற்படை

(10ம் பக்கம் பார்க்க)

## அமெ. அமைச்சர் இலங்கை வருவார்

(கொழும்பு)

தென்னாசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா எதிர்வரும் 12ம் திகதி கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் மாநாடு தொடர்பாக ஆராயும் பொருட்டே கிறிஸ்ரினா றொக்கா கொழும்பு வருகிறார்.

அதேவேளை நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீட்டச

(10ம் பக்கம் பார்க்க)







நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற எரிக்சோல்ஹெய்ம்-புலிகள் சந்திப்பின் சில காட்சிகள்...

# களுத்துறைக் கைதிகளின் வழக்குகள் வட-கிழக்கிற்கு மாற்றப்படமாட்டாது

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் வழக்குகளை வடக்கு கிழக்கு மாகாணத்திலுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றும் திட்டத்தினை சட்டமா அதிபர் திணைக்களம் நிறுத்தியுள்ளது.

அண்மை நாட்களாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அரசியல் கைதிகளின் வழக்கில் சாட்சிகளாக உள்ள பொலிஸார் மற்றும் படை அதிகாரிகள் வடக்கு கிழக்குக்குச் செல்ல அஞ்சுவதனாலேயே வடக்குக் கிழக்கு கைதிகளை இடமாற்றம் செய்ய முடியாதுள்ளதாக சட்டமா அதிபர் தெரிவித்துள்ளார். (த-10)

# பிராந்திய இந்து மாநாட்டில் பேரெழுச்சியுடன் அணிதிரள்க

## இந்து மக்களுக்கு அமைச்சர் மகேஸ்வரன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவலகள் அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ். பிராந்திய மாநாடு இன்று காலை 8மணிக்கு மாபெரும் ஊர்வலத்துடன் ஆரம்பமாகிறது.

திருநெல்வேலி சிவன் கோவிலில் இருந்து நல்லை ஆதீனம் வரை இடம்பெறும் இந்த ஊர்வலத்தில் இந்து சமய மக்கள் அனைவரையும் பேரெழுச்சியுடன் பங்கேற்குமாறு இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

மேற்படி ஊர்வலத்தின் முன்னே யானை செல்ல அதனைத் தொடர்ந்து சிவாச்சாரியார்கள், சமயப் பெரியார்கள், பொதுமக்கள் பவனியாகச் செல்வர். இந்த ஊர்வலத்தில் அமைச்சர் மகேஸ்வரனும் கலந்து கொள்வார். (த)

# 2ஆவது உலக இந்துமாநாடு
# யாழ்-பிராந்திய சிறப்பு மலர் 2003

## இந்துமதம் அது எங்கள் மதம்!
## என்றும் அதனைப் போற்றுவமே

அநாதியான எங்கள் இந்து மதம்
ஆழ்ந்த தத்துவங்கள் நிறைந்த மதம்
இறைவன் ஒருவன் உள்ளான் என்று
ஈடினை இன்றி உணர்த்தும் மதம்
உயர்ந்த நல்ல நெறிகள் பலவும்
ஊரார் போற்றக் கூறும் மதம்
எம்மதமும் நன்மதம் என்றே
ஏற்றுக் கொள்ளும் பெரிய மதம்
ஐயம் இன்றி உலகோர்க்கு எல்லாம்
ஓம்பி நல்லறம் சொல்லும் மதம்
ஒளவைப்பாட்டி புகழ்ந்த மதம்
அகிலத்திற்கே முதன்மை மதம்
அறிவுத்தத்துவம் நிறைந்த மதம்
அதுவே எங்கள் இதய மதம்
உலகஇந்து மாநாடு இங்கே
உணர்வு பூர்வமாய் நடக்கையிலே
உள்ளத்தில் நல்ல உறுதியுடன்
உயர்வாய் எம்மதத்தைப் போற்றுவமே.

நீர்வை மணி


நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்துமாநாடு
சிறப்புற வாழ்த்துகிறோம்



* துவிச்சக்கர வண்டிகள்
* T.V வகைகள்,
* அன்ரனாக்கள்
* றேடியோ வகைகள்
* மணிக்கூட்டு வகைகள்

அனைத்தையும் பெற்றுக் கொள்ள

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்

50, 52, 54 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. - 021 222 2988
Fax - 021 222 2368

2வது உலக இந்துமாநாடு
சிறப்புற வாழ்த்துகின்றோம்


❀ பலசரக்குப் பொருட்கள்
❀ பாய்மா வகைகள்

அனைத்தையும் சிறந்த முறையில் பெற்றுக் கொள்ள

குகன் ஸ்ரோர்ஸ்

180, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

நடைபெறும் இந்துமாநாடு
சிறப்புற்று விளங்க எமது
நல் வாழ்த்துக்களை தெரிவித்துக்
கொள்கிறோம்
சகலவிதமான அழகுசாதனப் பொருட்களையும்
பெற்றுக் கொள்ள நாடுங்கள்



உமா வண்ணச்சோலை

இல. 25, 30, நவீன சந்தை யாழ்ப்பாணம்.

2வது உலக மாநாடு
சிறப்புடன் நடைபெற வாழ்த்துகின்றோம்.

CALTEX ஒயில்களுக்கான வடமாகாண ஏக விநியோகஸ்தர்

கஜமுகன் ஹாட்வெயாஸ்

147, 149 ஸ்ரான்லி வீதி
T.P. 021 222 2833
யாழ்ப்பாணம்.

இன்று நடைபெறும் 2வது உலக இந்து மாநாடு சிறப்புற
ஆசி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

சிறந்த சேவையுடன் இலகு பயணங்களுக்கு அழையுங்கள்.

Manoj Express



13, NEW MARKET BUILDING
POWER HOUSE ROAD,
JAFFNA.

T.P - 021 222 3916
0777 - 517019
0777 - 801038

Serendib Airline

# வெளிநாட்டவர்கள் விளையாட்டுத் திடலாக நாட்டை மாற்ற அரசு முயல்கிறது

## பிரதமரின் உரை மீதான விவாதத்தில் லக்ஸ்மன் கதிர்காமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளின் தேவையைப் பூர்த்தி செய்யவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளது என்று பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான லக்ஸ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.**

கடந்த செவ்வாயன்று பாராளுமன்றத்தில் பிரதமர் ஆற்றிய உரை மீதான விவாதம் நேற்று இடம் பெற்ற போது அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில்,

நாட்டின் தலைவி மீது நம்பிக்கை வைக்காத அரசாங்கம் விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கை வைத்துள்ளது.

அத்துடன், நாட்டின் எல்லைகளை நிர்ணயிக்கும் பொறுப்பு வெளிநாட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் ஏனைய கட்சிகள் அரசியலில் ஈடுபட அனுமதி வழங்க அரசு மறுத்து வருகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை சாதகமாக்கிக் கொண்ட புலிகள் வெளிநாடுகளில் இருந்து பெருமளவு ஆயுதங்களை கொள்வனவு செய்யத் தொடங்கி விட்டார்கள்.

அதுமட்டுமன்றி, அரசியலிலும் கைவைக்கத் தொடங்கி விட்டார்கள். அவர்களே இராணுவப் புலனாய்வுப் பிரிவினரையும் மாற்றுக் கட்சி உறுப்பினர்களையும் கொலை செய்து வருகிறார்கள்.


இவர்களை ஏற்றுக் கொண்டால், அது இந்தியாவிற்கும்-இலங்கைக்கும் இடையிலான நட்பிற்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

கடற்பரப்பில் கடற்படையினரின் நடவடிக்கைகள் தொடர்பான சட்டத் திருத்தங்களை மீறி நடக்கும் சந்தர்ப்பங்களை விடுதலைப்புலிகளுக்கு அரசு வழங்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி உள்ளனர் என்பதை இங்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அத்துடன், கடற்புலிகள் அமைப்பை இலங்கையின் கடற்படையாக இயங்க அனுமதிக்க வேண்டுமென போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கோரியுள்ளது.அப்படியாயின், எவ்வாறு ஒரே நாட்டில் இரண்டு கடற்படைகள் இயங்குவது?

இதற்கெல்லாம் பிரதான காரணம் அரசாங்கமே. அது மட்டுமன்றி வெளிநாட்டவர்களின் விளையாட்டுத்திடலாக இலங்கையை மாற்றவே தற்போதைய அரசு முயன்று வருகிறது என்று குற்றம் சாட்டினார்.



பிரதமரின் உரைமீதான விவாதத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசிய முன்னணியைச் சேர்ந்தவரும் காணி அமைச்சருமான ராஜித சேனாரத்னா,

போர் நிறுத்த உடன்படிக்கைக்கு மாற்றுத் தீர்வு ஒன்றை பாராளுமன்ற உறுப்பினரான லக்ஸ்மன் கதிர்காமர் முன்வைக்கத் தவறிவிட்டார்.

அத்துடன், போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரமாணங்களை மாற்றும் அதிகாரம் அரசாங்கத்திற்கு உண்டு என்பதையும் லக்ஸ்மன் கதிர்காமர் முதலில் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றார்.

அத்துடன், பொது ஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்ட சமாதானப் பேச்சுக்கள் தோல்வி கண்டதையும் அப்போது சர்வதேச நாடுகள் எதுவும் நிதி உதவி வழங்க முன்வராதமையையும் சுட்டிக்காட்டினார்.

மேலும்,தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானப் பேச்சில் தற்காலிகமாகவே விலகியுள்ளார்கள். அத்துடன், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டதும் சர்வதேச நாடுகள் நிதியுதவி வழங்க முன்வருவதையும் சுட்டிக் காட்டினார்.

அதுமட்டுமன்றி, சர்வதேச சமூகம் தமிழீழ விடுதலைப் புலிகளை மீண்டும் பேச்சுவார்த்தையில் இணைந்து கொள்ளுமாறு அழுத்தம் கொடுத்து வருவதுடன், அவர்களுடன் நேரடியான சந்திப்புக்களை நடத்தி அவர்களை சமாதானப் பேச்சில் கலந்து கொள்ளச் செய்ய பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

அதேசமயம், பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியில் இருந்த காலத்தில் திருகோணமலைத் துறைமுகத்தில் புலிகளின் டோறாக் கப்பல் தாக்கப்பட்டமையும் அதனை அடுத்து புலிகள் பேச்சை முறித்துக் கொண்டமையையும் நினைவு படுத்தினார். (உ-10)

## சமாதான முயற்சிகள் வெற்றி பெற வேண்டும்

### மாலே ஜனாதிபதியின் விருப்பம் இது

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற்று பொருளாதார அபிவிருத்தி ஏற்பட வேண்டும் என்பதே தனது விருப்பமாகும் என கொழும்பு வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி ம.்.மூத் அப்துல் கையூம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

இலங்கைக்கும் மாலைதீவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் நெடுங்காலமாகவே நீடித்து வருகின்றன.

அந்த வகையில் இரண்டு நாடுகளிற்கும் இடையிலான கலாசார பொருளாதார உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

அதேசமயம் கல்வி பயிலுவதற்காக மாலைதீவிலிருந்து பலர் இலங்கை வருகின்றனர். அது போன்று இலங்கையைச் சேர்ந்த பலர் மாலைதீவில் வேலை செய்கின்றனர் என்பதையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு மாநகர சபை முதல்வர் பிரசன்ன குணவர்த்தன கொழும்பு நகரத்தின் தங்கச் சாவியை ஜனாதிபதி அப்துல் கையூமிடம் ஒப்படைத்தார்.

இவ்வைபவத்தில் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம் தியாஸ் பார்க்கீர் மார்க்கர், கொழும்பு துணை நகரபிதா அசாத் சாலி உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டனர். (உ-10)

### அரசியல் நிலை குறித்து

## மலாக்கா முதல்வருக்கு ஹக்கீம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் இடைநிறுத்த மற்றும் அப்பேச்சுவார்த்தை தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய தன் அவசியம், முஸ்லிம்கள் பேச்சுவார்த்தையின் தனித்தரப்பாக கலந்து கொள்வதன் தேவை ஆகிய குறித்து கப்பல்துறை மற்றும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் மலாக்கா முதலமைச்சரிற்கு விளக்கம் அளித்துள்ளார்.

கொழும்பில் நடைபெறும் மலாய் இஸ்லாமிய மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்துள்ள மலேசியாவின் மலாக்கா மாநில முதலமைச்சர் டாருட் சிறீ முகமட்டை அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய போதே இது விடயங்கள் குறித்து விளக்கமளித்துள்ளார்.

அத்துடன், இலங்கையில் வாழும் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் மலாக்கா மாநில முதலமைச்சர் டாருட் சிறீ முகமட் இச்சந்தர்ப்பத்தில் கேட்டறிந்து கொண்டார். (உ-10)

## நாடக எழுத்துருவாக்க கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

நாடக எழுத்துருவாக்கம் சம்பந்தமான கற்கைநெறிக்கு ஆர்வமுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாடக அரங்கக் கல்லூரி கோரியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 9 மணி முதல் பகல் 1 மணி வரை தொடர்ச்சியாக 12 வாரங்களுக்கு நடைபெறவுள்ள இக்கற்கை நெறியானது எதிர்வரும் யூன் மாதம் ஆரம்பமாகவுள்ளது.

ஆர்வமுடையவர்கள் விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள நிறைவேற்று இயக்குநர், நாடக அரங்கக் கல்லூரி, ''தாயகம்'' திருநெல்வேலி வடக்கு எனும் முகவரிக்கு சுயவிலாசம் இடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

### கைத்தொழில் விருத்தி

## இலங்கை-இந்தியா இணைந்து செயற்படும்

(கொழும்பு)

உலகம் முழுவதும் உள்ள சந்தை நிலவரங்களுக்கேற்ப இலங்கையினதும் இந்தியாவினதும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் இரு நாடுகளினதும் கைத்தொழிற்றுறை அமைச்சுக்கள் ஒன்றாக செயற்படவிருக்கின்றன.

இதற்கான அடித்தள வேலைகள் தனது இந்தியாவிற்கான விஜயத்தின் போது ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக கைத்தொழில் அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்காக இருதரப்பினரும் ஒப்பந்தங்களை செய்யவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இது பற்றி ராரா, ஹீரோ சைக்கிள் போன்ற இந்திய நிறுவனங்களுக்கு அமைச்சர் விளக்கமளித்துள்ளார்.

அத்துடன்,இந்நிறுவனங்களும் இலங்கையில் தமது உற்பத்தியை அதிகரிப்பதற்கு விருப்பம் காட்டுகின்றன. முதற்கட்டமாக கொட்றிச் நிறுவனம் இங்கு குளிர்சாதனப் பெட்டிகளையும் ஹீரோ சைக்கிள் நிறுவனம் மோட்டார் சைக்கிள் களையும் ராரா நிறுவனம் தனது வாகனங்களுக்கு உபகரணங்களையும் உற்பத்தி செய்யவும் முன்வந்துள்ளன.

இலங்கைப் பட்டதாரிகளுக்கு தகவல் தொழில்நுட்பத்துறையில் இணைந்து கல்வி கற்கவும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக மேற்குறித்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் இலங்கை வரவுள்ளனர்.

இலங்கையின் கைத்தொழிலாளர்கள் தமது உற்பத்திகளுக்கான பொறிகள், உபகரணங்களை இறக்குமதி செய்வதில் சிரமமிருக்காது. இவ்வாறு கைத்தொழில் அமைச்சர் ரோஹித போகெல்லாகம தனது செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். (உ)



சுன்னாகம் கதிரமலைச்சிவன் கோயில் தேர் உற்சவத்தின் போது பிடிக்கப்பட்ட படம். படம்.நேசன்



புத்தூர் கிழக்கு ஸ்ரீஞானவைரவர் ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்து மாநாட்டு எழுச்சி நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும், ஆலய நிர்வாகத்தினரையும் படத்தில் காணலாம். படம்:சி.சண்முகம்.

# திருமறைக் கலாமன்ற ஏற்பாட்டில் சிறுவர் சமாதானப் பாசறை

## ஆயிரம் தென்னிலங்கைச்சிறார்கள் யாழ் .வருவர்

(யாழ்ப்பாணம்)

தேசிய ஒருமைப்பாட்டை விளக்கியும் தமிழ் சிங்கள சிறுவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் விதத்திலும் சமாதான பாசறை மற்றும் ,திருமறைக்கலாமன்ற மாநாடு என்பவற்றை நடத்துவதற்கு யாழ்.திருமறைக் கலாமன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் சிறுவர் சமாதானப் பாசறையும் 16ஆம திகதி திருமறைக்கலாமன்ற மாநாடும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் தினமும் காலை 9மணிதொடக்கம் மாலை வரை நடைபெறவுள்ளது.

முதல் நாள் நிகழ்வுகளாக பேராசிரியர் எதிரு வீர சரத்சந்திரவின் 'சிங்கபாகு' இயக்குநர் ஜெரோம் டி. சில்வாவின் 'லுக் அட்மி' இயக்குநர் கேமலதா ரூபசிங்கவின் 'தொப்பி வியாபாரி' ,இயக்குநர் மெரண்டா ஹேமலதாவின் சிங்கள நடன வடிவங்கள் மற்றும் புதுவை அன்பனின் கரையைத்தேடும் ஓடங்கள் என்பன ஆற்றுகை செய்யப்படவுள்ளன.

தவிர வசந்த நபயசேகர இயக்கிய திரைப்படம் ஒன்று காண்பிக்கப் படவுள்ளது.


இரண்டாம் நாள் நிகழ்வாக திருமறைக்கலாமன்றத்தின் சிறுவர் சமாதான வலயத்தை சேர்ந்த ஆயிரம் தென்னிலங்கைச் சிறார்களின் உறவுப்பால கலை நிகழ்வுகளும்,


சமகால சிறுவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக சிறுவர் பிரதிநிதிகள் ,பொலிஸ் உத்தியோகத்தர்,பாடசாலை அதிபர்கள், புலிகளின் அரசியல்துறை பிரதிநிதிகள், உளவளத்துறையினர், சிறுவர் பாதுகாப்பு நிதியம், சேவா நிறுவனம், யுனிசெவ் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலும்,சமாதானத்தை வலியுறுத்தும் சிறுவர்களின் நகர வலமும் நடைபெறவுள்ளது.


16ஆம்திகதி அன்று திருமறை கலாமன்ற மாநாடு நடைபெறவுள்ளது.இதில் திருமறைக்கலாமன்ற செயற்பாடுகள குறித்து 11 தலைப்புகளில் உரைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும்உள்ள திருமறைக்கலாமன்றங்களின் செயற்பாடுகளை விளக்கும் கண்காட்சி ஒன்றும் இடம்பெறவுள்ளது. (உ-4)

## பிராந்திய இந்து மாநாடு குடாநாடு எழுச்சிக்கோலம்







அலங்காரச் சிகரங்களும், வீதி வளைவுகளும்

### தாய்லாந்து பிரதமர் தக்ஷின் சின்னஹற்றா

# பௌத்தமதம் சார் விஜயமாக 14இல் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

தாய்லாந்துப்பிரதமர் தக்ஷின் சின்னஹற்றா இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் 14ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

இவர் இலங்கையில் நடைபெறும் விசாக நோன்மதி தின நிகழ்வுகளில் கலந்துகொள்வார் எனவும் 'சியாமோ பாலி நிக்காய' என அழைக்கப்படும் பௌத்த குரு பீடத்தின் தீட்ச நடைமுறையை ஆரம்பித்து 250 ஆண்டுகள் நிறைவு பெறுவதை முன்னிட்டு நடத்தப்படும் நிகழ்வுகளிலும் கலந்து சிறப்பிப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தாய்லாந்து அரசாங்கத்தின் அனுசரணையுடன் கண்டி பல்லேகல பிரதேசத்தில் அமைய விருக்கும் சர்வதேச பௌத்த நிலையத்தின் கட்டடங்களை அங்குரார்ப்பணம் செயவதுடன் பிக்குமாரிற்கான வைத்தியசாலையில் அடிக்கல்லையும் நாட்டி வைப்பார் எனவும் கூறப்படுகிறது. (உ-10)

# நாட்டில்இடம்பெறும் படுகொலைகள் சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்

### கண்காணிப்புக் குழு அறிக்கை

(கொழும்பு)

அரசியல் கட்சி உறுப்பினர்கள், உளளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மீதான தாக்குதல்கள் மற்றும் படுகொலைகள் தொடர்ந்தும் இடம் பெற்றுவருவது யுத்த நிறுத்தத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமையும் என இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்தும் இடம் பெறுமானால் மக்கள் மத்தியில் பீதி ஏற்பட்டு அரசியல் ஒடுக்கு முறை ஏற்படுமிடத்து சமாதான முயற்சிகளை நிச்சயம் அது பாதிக்கும் என கண்காணிப்புக்குழு சுட்டிக் காட்டியுள்ளது.

இது குறித்து கண்காணிப்புக்குழு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில்

அரசியல்கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் அரச படையில் சேர்ந்து செயற்படுவோர் மீது இடம் பெறும் தாக்குதல்கள் குறித்து அரசாங்கம் பல தடவைகள் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்திருந்தது.

இவ்வாறாக வடக்குக்கிழக்குப் பகுதிகளிலிருந்தும் பல்வேறு அச்சுறுத்தல் தொடர்பான முறைப்பாடுகள் கண்காணிப்புக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன.

இச் சம்பவங்களின் பின்னணியில் விடுதலைப்புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாக அம்முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அவர்கள் இவ்வாறான சம்பவங்களுக்கும் தமக்கும் தொடர்பில்லை என தெரிவித்துவருகின்றனர்.

இதேவேளை,நாம் மேற்கொண்டு வரும் விசாரணைகளில் இருந்து விடுதலைப்புலிகள் தான் இவற்றைச் செய்தார்கள் என்பதைக் கண்டறிய முடியவில்லை. சில சாட்சிகள பயம் காரணமாக சாட்சியமளிக்க முன்வருவதில்லை என்றும் தெரிய வந்துள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள கொலைச சம்பவங்களுக்கு கட்சியொன்று காரணமாக இருந்தால் அது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் செயல் என்பதை தெளிவாக கூறமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-10,5)

கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

2வது உலக இந்து மாநாட்டை முன்னிட்ட இறுதி நாள்

நிகழ்ச்சி

'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம'

காலம் : 10.05.2003 சனிக்கிழமை பி.ப. 3 மணி
இடம் : நெல்லியடி முருகன் திருமண மண்டபம்

நிகழ்ச்சிகள்

1. மங்கள வாத்தியம்
2. மங்கள விளக்கேற்றல்
3. ஆசியுரை (ஆலய பிரதானகுரு)
4. தேவார பாராயணம்
5. பாலர் பாடசாலை நிகழ்ச்சிகள்
6. பண்ணிசையும் திருமுறை ஓதலும்
7. இ்சைக் கச்சேரி
8. கர்நாடக இசை
9. பட்டிமன்றம்
   ''சைவப் பண்பாட்டைப் பெரிதும் பேணுவது ஆண்களா? பெண்களா?''
10. தமிழக அறிஞர்களின் சொற்பொழிவுகள்.

09.05.2003 வெள்ளிக்கிழமை சங்க எல்லைப்பரப்பில் ஊர்திபவனி வருதல். மேற்படி நிகழ்வை முன்னிட்டு 10.05.2003இல் சங்கத்தின் அருகாமையிலுள்ள காவல் தெய்வத்திற்கு பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

கூட்டுறவே நாட்டுயர்வு

(C/6115)

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்
கட்டைவேலி-நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்


## துடுப்பாட்டப் போட்டி


(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பாடசாலைகளின் துடுப்பாட்டச் சங்கம்,அகில இலங்கை ரீதியில் நடாத்தும் 'அஸ்ரா' வெற்றிக்கிண்ண 16 வயதுக்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டப்போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக்கல்லூரி யூனியன் கல்லூரி மைதானத்திலும்,

உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி உடுப்பிட்டி அமெரிக் கமிஷன் கல்லூரி மைதானத்திலும் மோதவுள்ளன. (உ)








எழுச்சிக்கோலம்பூண்டுள்ள யாழ். நகரின் சில பகுதிகள். படங்கள்: க.பவன்

## யாழ். பிராந்திய இந்து மாநாடு இன்று ஆரம்பம்!

# குடாநாடு விழாக்கோலம் வீதியெங்கும் மகரதோரணம்

## பார்க்கும் இடமெங்கும் பட்டொளி வீசிப் பறக்கும் நந்திக்கொடிகள்

(யாழ்ப்பாணம்)

**இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ்ப்பாணப் பிராந்திய இந்து மாநாடு இன்றுமுதல் இரு தினங்கள் சொல்லு தமிழ் வளர்த்த நாவலர் பிறந்த நல்லை நகரில் இடம்பெறவுள்ளது.**

இதனையொட்டி யாழ். குடாநாடு விழாக்கோலம் பூண்டுள்ளது. திரும்பும் திக்கெல்லாம் மகர தோரணங்களும், பார்க்கும் இடமெங்கும் நந்திக் கொடிகளும் பட்டொளி வீசிப் பறக்கின்றன.

இதனை முன்னிட்டு கிராமங்கள், நகரங்கள் தோறும் எழுச்சி நிகழ்வுகளும் இந்து மதத்தைப் பிரதிபலிக்கும் நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றமையை அவதானிக்க முடிகிறது.

பிராந்திய இந்து மாநாட்டு முதல் நாள் நிகழ்வு இன்று காலை 8 மணிக்கு திருநெல்வேலி சிவன் கோவிலில் இருந்து நல்லை ஆதீனம் வரையான மங்களகரமான எழுச்சி ஊர்வலத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து காலை 9 மணிக்கு நல்லை ஆதீனத்தில் பிராந்திய மாநாடு யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை இரண்டாவது உலக இந்து மாநாட்டு யாழ். பிராந்தியக் குழுவின் செயலாளர் சிவமகாலிங்கமும், ஆசியுரையை சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்களும், அருளாசி உரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரைகளை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

தொடக்க உரையை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்த, சிறப்புரையை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளும் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நிகழ்த்தவுள்ளார்.

இவற்றையடுத்து திருமுறை அரங்கு, இளைஞர் அரங்கு, பண்ணிசைக் கச்சேரி, கவியரங்கம், நாடகம் என்பன இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இந்நிகழ்வுகளைக் கண்டுகளிக்க கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பெரும் திரளான மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளைய இரண்டாம் நாள் நிகழ்வுகள் நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளன. (உ)

---

இரண்டாவது உலக இந்து மகாநாடு தொடர்பாக...

### உரத்த சிந்தனை

## ஆலய வழிபாடு

எங்கும் வியாபித்திருக்கும் ஆண்டவனை மன ஒருமைப்பாட்டுடன் வழிபாடியற்றி அவனருள் பெற உகந்த இடம் ஆலயம். ஆலய வழிபாட்டிற்கென சில விதிமுறைகள் உள்ளன. வழிபடும் முறைகள் தெரியாமல் தவறுகள் செய்வோர் பலர் எனப் பார்த்தோம். சுருக்கமாக அதனைத் தெரிந்து கொள்வோமா?

ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து விபூதி தரித்துக் கொண்டு சிவ சிந்தனையுடன் ஆலயம் செல்ல வேண்டும். வீதியில் கை கால்களைக் கழுவிச் சுத்தம் செய்த பின் கோபுரத்தை நமஸ்காரம் செய்தவாறு உள்ளே நுழைந்து பலிபீடத்திற்கு இப்பால் வடக்கே தலைவைத்து வீழ்ந்து வணங்குதல் வேண்டும்.

வடக்கு நோக்கிய சந்நிதியாயின் கிழக்கே தலைவைத்து நமஸ்காரம் செய்தல் முறை. எவ்வாறாயினும் வடக்கிலும், கிழக்கிலும் கால் நீட்டி வணங்குதல் தகாது. பரிவார தெய்வங்க்ளின் சந்நிதிகள் உள்ள திசைகளில் கால் நீட்டுதலும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஆண்கள் தலை, கையிரண்டு, செவியிரண்டு, வாய், புயங்கள் இரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்தில் படியும் படியாக அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாளிரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தப் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

மார்பு பூமியில் படும்படி வலக்கையை முன்னும், இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப் பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தக் கைகளை அரையை நோக்கி நீட்டி வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்து வணங்குதலே அஷ்டாங்க நமஸ்காரமாகும்.

இதன்பின் வீதி வலம் வரும்போது சிரசிலாவது மார்பிலாவது இரு கரங்களையும் குவித்துச் சிவ நாமங்களையுச்சரித்தவாறு மெல்ல அடியெடுத்து வைத்து நடக்க வேண்டும். விநாயகரை ஒரு தரமும், சூரியனை இருதரமும், அம்பிகையையும் விஷ்ணுவையும் நான்கு தரமும் வலம் வருதல் முறை.

விநாயகரை வணங்கும் போது முஷ்டியாகப் பிடித்த கைகளினால் நெற்றியில் மும்முறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் மாறிப் பிடித்து மும்முறை தாழ்ந்தெழுந்து (தோப்புக்கரணம்) வணங்க வேண்டும்.

அபிஷேகம், நைவேத்தியம் என்பன நிகழும்போது சுவாமி தரிசனம் செய்வதும், வீழ்ந்து வணங்குவதும், வீதிவலம் வருவதும் தகாது. தீபாராதனை நிகழும்போது வீழ்ந்து வணங்குவதும் முறையன்று. வீதிவலம் வரும்போது ஒவ்வொரு தரமும் சண்டேஸ்வரரை வழிபடாது (கைகொட்டுதல் மூலம் அவரது தவத்துக்கு இடையூறு செய்யாமல்) இறுதியாக வலம் வரும்போது மாத்திரம் அவரை வணங்கி வழிபாட்டின் பலனைத் தரும்படி கேட்டு மும்முறை மெல்லக் கைகொட்டி வணங்க வேண்டும்.

சண்டேஸ்வரரை வலம்வந்து வணங்குவது கூடாது. ஏனெனில் மூலஸ்தானத்திற்கும் சண்டேஸ்வரருக்குமிடையே குறுக்கே போகக் கூடாது என்பது விதி. இதேபோல நந்திக்கும் மூலஸ் தானத்திற்குமிடையே குறுக்கே போவதும் தகாது.

இதன்பின் நந்தியை வணங்கி அனுமதிபெற்று நமது பாவங்கள் யாவற்றையும் பலிபீடத்திலே பலியிட்டதாகப் பாவனை செய்து உள்ளே சென்று அர்ச்சனை செய்வித்து வணங்க வேண்டும். வழிபாடு முடிந்ததும் சிறிது நேரம் ஆலயத்தின் ஓர் இடத்தில் அமைதியாக இருந்து தியானம் செய்வது அவசியம்.

ஆசாரமில்லாது ஆலயத்துக்குப் போதல், அங்கு உயர்ந்த ஆசனங்களில் இருத்தல், கால் நீட்டுதல், தோளிலே உத்தரியமிடுதல் உணவு, வெற்றிலை உண்ணல், பொடி இடுதல், விக்கிரகங்களைத் தொடுதல், பலிபீடம், விக்கிரகம், தூபி என்பவற்றின் நிழல்களை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல் என்பன ஆலயத்திலே செய்யத் தகாத குற்றங்களாகும்.

தூபியின் நிழல் நிலத்தில் விழும்போது அதனை மிதியாமல் செல்ல இடமில்லாது விடின் அதனை ஐந்து பங்காக வகுத்து மூன்று பங்கை நீக்கி எஞ்சிய இரண்டு பங்கில் மிதித்துச் செல்லலாம். சுவாமி வீதி வலம் வரும்போது நிழலை மிதித்தல் பாவமாகாது.

**ப.சிவானந்த சர்மா B.A (Hons) (கோப்பாய் சிவம்)**
**நிர்வாக உத்தியோகத்தர்- வேதசிவாகம குரு குல கலாசாலை**

---

## சமய அறிவுப் போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மேற்கு மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இடம்பெற்ற நிகழ்வுகளின் ஓர் அங்கமான சமய அறிவுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் வருமாறு:

**பிரிவு 1**
முதலாமிடம்: கோ.தமிழ்மாறன்
இரண்டாமிடம்: க.ஜெயரஞ்சன்
மூன்றாமிடம்: ப.குணாயினி

**பிரிவு2**
முதலாமிடம்: கா.சுகிர்தா
இரண்டாமிடம்: கா.சிந்துயா
மூன்றாமிடம்: தி.முரளிகாந்த்

இவர்களுக்கான பரிசில்கள் இன்றைய இறுதிநாள் சிறப்பு நிகழ்வுகளில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ-126)

## எழுச்சிப் பெருவிழா

(யாழ்ப்பாணம்)

யா/சன்மார்க்க மகாவித்தியாலயத்தின் இந்து சமய எழுச்சிப் பெருவிழா இன்று மு.ப. 10 மணிக்கு பாடசாலையின் அதிபர் து.நடராஜலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.இராஜலிங்கமும் சிறப்பு விருந்தினராக இந்தியாவிலுள்ள பச்சையப்பன் கல்லூரி முனைவர் கலாநிதி இரா.செல்வகணபதியும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக, பூஜை வழிபாடும், பக்திப் பாடல்கள் பண்ணிசை என்பன இடம்பெறவுள்ளன. (உ)

## இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்து மாநாட்டைச் சிறப்பிக்கும் விசேட எழுச்சி நிகழ்வு இன்று நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் கோவிலில் இடம்பெறவுள்ளது.

இன்று பகல் விநாயகப் பெருமானுக்கு அபிடேக ஆராதனைகளும் அன்னதானமும் இடம்பெறுவதுடன் மாலை விசேட பூஜை, கூட்டுப் பிரார்த்தனை, சுக்கிரவார உற்சவம், சுவாமி வீதிஉலா என்பனவும் விஷேட ஆன்மீகச்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளன. (உ)

* * * *

(வேலணை)

இரண்டாவது உலக இந்து மாநாட்டை முன்னிட்டு வேலணைப் பிரதேச சபையினால் நடாத்தப்படும் சமய நிகழ்வுகள் கடந்த புதனன்று காலை நந்திக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின.

இறுதிநாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிரதேச சபையின் செயலாளர் செ.சண்முகராஜா தலைமையில் நடைபெறவுள்ளன. இதில் விசேட பூஜை வழிபாடு, சொற் பொழிவுகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. (து-3,11)

---

பிராந்திய இந்து மாநாட்டை ஒட்டி

## நல்லையில் நாளை மகளிர் அரங்கம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடாத்தும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ். பிராந்திய மகளிர் அரங்கம் நாளை சனிக்கிழமை காலை 9 மணி முதல் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், வாழ்த்துரையை கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து மகளிர் அரங்கம் ''இந்து மகளிர் அன்றும் இன்றும்'' என்னும் கருப்பொருளில் இடம்பெறவுள்ளது.

இதில் ''மகளிர் வாழ்வியலில் வழிபாடு'' என்ற பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகமும்,

''மகளிர் வாழ்வியலில் சமயம்'' என்னும் பொருளில் உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனும்,

''மகளிர் வாழ்வியலில் மதம்'' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி சி.செல்வரஞ்சிதமும் கட்டுரைகளை வாசிக்கவுள்ளனர்.

அடுத்ததாக இடம்பெறும் கருத்துரை நிகழ்வில், ''மகளிர் வாழ்வியலில் வழிபாடு'' எனும் தலைப்பில் யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி தி.ஜெயமலர், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை உதவி விரிவுரையாளர் செல்வி ந.செல்வஅம்பிகை ஆகியோரும்,

''மகளிர் வாழ்வியலில் சமயம்'' என்னும் தலைப்பில் மக்கள் வங்கி முன்னாள் முகாமையாளர் திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம், யாழ். இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஜெ.சரஸ்வதி ஆகியோரும்,

''மகளிர் வாழ்வியலில் மதம்'' என்னும் தலைப்பில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் செல்வி சி.மலர், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல் விரிவுரையாளர் செல்வி ஜீ.பகீரதி ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். (உ)

---

பிராந்திய இந்து மாநாட்டை ஒட்டி

## நல்லையில் இன்று இளைஞர் அரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு நடத்தும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ்ப்பாணப் பிராந்திய இந்து மாநாட்டின் இளைஞர் அரங்கு இன்று பி.ப. 2.30 மணி முதல் நல்லை ஆதீனத்தில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில், வாழ்த்துரைகளை யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி பிரம்மஸ்ரீ ப.கோபால கிருஷ்ண ஐயர், தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழக முனைவர் கயாஸ்கரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

தொடர்ந்து ''இந்து சமய விழுமியங்கள்'' என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக மாணவன் கு.பாலஷண்முகன், ஆசிரியர் என்.விஜயசுந்தரம், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவன் இரா.கேதீசன் ஆகியோரும்,

''இந்து சமயத்தின் சமகாலச் செல்நெறிகள்'' என்னும் பொருளில் யாழ். பல்லைக்கழக மாணவன் தி.செல்வமனோகரன், யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மாணவர் மன்றத்தைச் சேர்ந்த வா.சியாமினி, ஆசிரியர் ச.லலீசன் ஆகியோரும் இந்து இளைஞரின் பங்கும் பணியும் என்னும் பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து மன்றத் தலைவர் சௌ.சசிகுமார சர்மா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை ஆசிரிய மாணவன் ஏ.அனுசாந்தன், யாழ். மாவட்ட இந்துப் பேரவையைச் சேர்ந்த ப.ஜயந்தன் ஆகியோரும் கட்டுரைகளை வாசிக்கவுள்ளனர்.

நிகழ்வில், கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் திருமதி இ.கலைவாணி, யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை பேராசிரியர் நா.ஞானகுமாரன், கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (உ)

# மலையைச் சுமத்தல் என்பது...

1990ம் ஆண்டில் ஒருநாள் இரவெல்லாம் பேய்மழை-கண்ணைக்குருடாக்கும் கனத்த மின்னலுடன் இயமன் குரல் போன்றஇடியுடன்-வெகு வேகமாய் வீசித்தள்ளியகாற்றுடன்-மா மழை! மழைஎன்றால் விடியாதாஎன்ன?

காலை 6.50!

இந்திய வானொலி அதைப் பற்றி முதல்அறிவிப்புச்செய்தது. யாழ்ப்பாணத்திலுள்ள மக்கள் பத்துலட்சம் பேரையும் அங்கிருந்து முழுமையாக வெளியேற்றி விட்டு அரசு பயங்கரவாதிகளுக்கெதிராகக் கடும்தாக்குதல் நடத்தப்போகிறதாம்!

(அப்படியானால்... இதுவரை நடைபெற்றதெல்லாம்... காலை, மதியம், மாலை, இரவுஎன்று நாலுக்கு நாலு தரம்தவறாது நடந்தவிமானத்தாக்குதல், அங்குலம் தவறாமல் வந்து விழும் செல்தாக்குதல்எல்லாம் இலேசான தாக்குதல் என்று எழுதிக் கொள்ள வேண்டும்!)

எனக்குள்ளே எழும்புகள் எலிணம்முறிந்து போனஉணர்வு! முறிந்துபோன எலும்புத்துண்டுகளைப் பொறுக்கிஎடுத்துத்தர பத்துப்பேர் வேண்டும்போல இருந்தது. கண்கள் ஒரு நரக லோகத்தைக் கற்பனையில் காவியிருந்தன.

நண்பர்ஒருவர் வீட்டுக்குவந்திருந்தார். 'என்னையா இது? அகதிகளாக இந்தியாநோக்கிப் புறப்படுபவர்களைதான் தடுத்து... மன்னாரில் அகதிமுகாம்... (தடுப்புக்காவல்?') போடப்போகிறார்கள் என்று நினைத்தோம். நாங்கள் எமது சொந்தக் கிராமங்களை விட்டு வெளியேற விரும்பவில்லை என்று சொல்லுகிறவர்களையும் எமது மண்ணைவிட்டு எழும்பப்போவதில்லை என்று நினைக்கிறவர்களையும்-கட்டாயமாக வவுனியாவுக்கு அனுப்பப் போகிறாாகளாமே? இதென்னையா அநியாயம்?' என்று கேட்டேன்.

நண்பர்சிரித்தார்.

'துக்ளக்கின் கதை தெரியுமா உங்களுக்கு?' என்று கேட்டார்.

'தலைநகரை மாற்றப் போகிறேன் என்று சொல்லி, டில்லியில் இருந்து மனிதர்களை மட்டுமல்ல, ஆடு, மாடு, நாய்களையும் ஏற்றி இறக்கியகதைதான் இதுவும்...' என்றுசொல்லி மீண்டும் இடி இடிஎன்று சிரித்தார்.

'சிரிக்கிறவிஷயமா இது? குறிப்பிட்டஒரு திகதியைகூறி அதற்குள் எல்லோரும் வெளியேறி விடவேண்டும் என்று அரசு அறிவித்தால்...?'

நானும் விடாப்பிடியாகக் கேட்டேன்.



'இது நடைமுறை சாத்தியம் அற்றவிடயம். பத்துலட்சம் மக்களையும் அவர்களுடைய வீடுவாசல்களையும் கிண்டி அள்ளி எங்கேஏற்றுவது? எப்படி ஏற்றுவது?'

மீண்டும் சிரித்துக்கொண்டே அவர் போய்விட்டார்.

அவர்மனம் எதிர்காலத்தை நேரானசிந்தனையுடன் பார்ப்பது எனதுமனம் மறையானசிந்தனைகளையும் உள்ளேவிட்டு தீர்மானம் எடுக்க முனைவது. இவற்றில் எந்தமனம் சிறந்ததுஎன்று என்னால்தீர்மானிக்க முடியவில்லை.

திடீரென்று அவ்விடத்தில் வீசிய காற்றில் துர்நாற்றம் கலந்திருந்தால் நானும் இடத்தைவிட்டு எழுந்துகொண்டேன்.

என்றாலும் என்மனதை இது விடயம் அரித்து, அரித்துக் கொண்டேஇருந்தது. பாதுகாப்பு அமைச்சர் என்னதான் ஜோக்கராக இருந்தாலும், முற்றிலும் சிரிப்புக்கிடமானவிடயத்தை ஜனாதிபதியின் பரிசீலனைக்கு வைப்பாரா?

ஓரிரு தினங்களுக்குப்பின், சிலபுத்தகங்களோடு உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றேன். செல்லும் பாதைஎங்கும் புற்கள் முளைத் திருந்தன. சென்ற வார மழையோடு சிவப்பு நட்சத்திரமெனப் புல்லுப் பூக்கள் காலில் மிதிபட்டன. உறவினர் வீட்டில் புத்தகங்களோடு அந்தக் கேள்வியையும் இறக்கினேன்.

''எங்களையெல்லாம் வவுனியாவுக்கு அனுப்பப்போகிறாராமே?''

இவர் முந்தியவரை விட இன்னும் பலமாகச் சிரித்தார்.

''மலையைச் சுமந்தவனின் கதை தெரியுமா உங்களுக்கு?'' என்று கேட்டார்.

''சொல்லுங்கள்'' என்றேன்.

''மலையைச் சுமப்பதென்பது முடியாத காரியம்'' என்று எல்லோருக்கும் நன்கு தெரியும்.

ஒருவன் வந்தான். புன்னகை பூசிய முகத்துடன்! மிகத் துணிகரமாக நெஞ்சை நிமிர்த்தி, எல்லோரும் வியக்கும்படி சொன்னான்.

''என்னால் மலையைச் சுமக்க முடியுமா!''

''உண்மைதானா?''

மக்கள் அவனை மிகுந்த அதிசயத்துடன் நோக்கினர்.

''உண்மை தான். நான் செய்து தான் காட்டப் போகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை! ஒரு வருட காலத்துக்கு எனக்குக் கோழி, ஆடு, முட்டை, பால் என்று புஷ்டியான நிறை உணவு தரவேண்டும். உடல் ஆரோக்கியம் இருந்தால் எதையும் செய்யலாம்!''

போனால் போகிறது! ஒரு வருடம் தானே! மக்கள் அவன் விரும்பிய உணவெல்லாம் அவனுக்குக் கொடுத்தனர். அவனும் நன்றாகத் தின்று கொழுத்திருந்தான். ஒரு வருட கால அவகாசம் முடிந்தது.

''என்னப்பா? எப்போது மலையைத் தூக்கப் போகிறாய்? எந்த மலையைத் தூக்குவாய்?'' மக்கள் கேட்டனர்.

''இதோ பாருங்கள்! சொன்ன வாக்குத் தவறாமல் செய்து முடிக்கிறேன்'' என்று அறைகூவி அவன் கம்பீரமாய் நடந்து மலையடிவாரத்திற்கு சென்றான். அந்த நாட்டிலேயே மிக உயர்ந்த மலை அது! அவன் மலை சுமப்பதை பார்க்கும் ஆவலோடு மக்கள் அலை அலையாய் அவன் பின் சென்றது. மலையின் ஒரு பக்கத்தில் உண்மையான சமுத்திரம்! மறு பக்கத்தில் ஜன சமுத்திரம்! ''லெப்ட், றைற்'' போட்டு, மலையடிவாரத்திற்குச் சென்றவன், அப்படியே பேசாமல் நின்றான். கண்களை மூடிக் கொண்டான்.

''என்ன? இவன் தியானம் செய்கிறானா? கடவுளை வணங்குகிறானா? நேரம் செக்கன் களில் இருந்து நிமிடங்களாகி கரைந்து மறைந்தது.

''என்னப்பா? எங்களை ஏமாற்றுகிறாய்; நீ எப்போது மலையைச் சுமக்கப் போகிறாய்?'' மக்களின் குரலில் இப்போது ஒரு உலோகத் தன்மை வந்து விட்டதால் போலும் அவன் கண்களை திறந்து கொண்டான்.

குளிர்ந்த மிக இனிமையான இயற்கையின் அழகு அப்பிரதேசத்தை தேவ உலகாக்கிக் கொண்டிருந்தது. அவன் மிக அமைதியாகவும் தெளிவாகவும் பேசினான்.

## வெள்ளி முற்றம்

''ஏனையா? நான் என்ன சொல்லியிருந்தேன் என்று நன்றாக நினைவு படுத்திப் பாருங்கள். மலையைச் சுமப்பேன் என்று தானே சொன்னேன்? மலையைத் தூக்குவேன் என்று சொல்லவில்லையே! நீங்கள் யாராவது தூக்கித் தோளில் வைத்து விடுவீர்கள் என்று எதிர்பார்த்துத் தான் இதுவரை கண்களை மூடிக் கொண்டு ''தம்''பிடித்து நின்றேன். நீங்கள் ஏன் தாமதிக்கிறீர்கள்? ஒருவர் அல்ல... பலர் சேர்ந்தாவது தூக்கி என்தோளில் வைத்துவிடுங்கள்... நான் சுமக்கிறேனா... இல்லையா பாருங்கள்!''

ஜனசமுத்திரம் அசடு வழிந்து திரும்பிச் சென்றது!

''எப்படிக் கதை?'' என்று கேட்டார் மீண்டும் இடி இடியென்று சிரித்தார்.

### கோகிலா மகேந்திரன்

இப்போது எனக்குத் தான் சிரிப்பு வந்தது.

பத்து லட்சம் மக்களை வெளியேற்றிக் கொடுத்தால்...! எனக்கும் இப்போதே நேரான சிந்தனை தொற்றிக் கொண்டது. மனம் நிறையவே அமைதிப்பட்டது போலிருந்தது. எழுந்து நடந்தேன்.

1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு சிறு மலையைத் தூக்கி அவனது தோளில் வைத்தனர்.

அவன் சிறிது காலம் காவிக் கொண்டு நின்றான்.

முதுகுவலி தாங்க முடியவில்லை. முறியப் போகிறது முதுகு. உண்மையான பற்களாயினும் பொய்ச்சிரிப்போடு மீண்டும் இறக்கி வைத்துவிட்டான். மரணத்தின் அரும்பு மயிர்கள் முளைப்பதை அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும்.

புரிந்துகொண்டநாள்
22.02.2002

# முஸ்லிம் ஆயுதக்குழுக்களின் உருவாக்கம் தமிழ்-முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தும்

## மட்டு.-அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ் உரை

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் இளைஞர்களுக்கு ஆயுத பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்டு ஆயுதக் குழுக்கள் உருவாக்கப்படுவதால் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கிடையிலான உறவு மேலும் விரிசலடையவே வழிவகுக்கும்.

இவ்வாறு மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தெரிவித்துள்ளார். நேற்றைய தினம் அம்பாறை மாவட்டத்தில் நடை பெற்ற முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள முஸ்லிம் மக்களின் காணிகளை அவர்களிடமே மீள ஒப்படைப்பது தொடர்பாக ஆராயும் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

தமிழ்-முஸ்லிம் மக்களது தாயகம் வடக்கு-கிழக்கு என்பதை தலைவர் பிரபாகரன் தெட்டத் தெளிவாக கூறியுள்ளார். இந்த நிலையில் கிழக்கு மாகாணத்தில் தென் கிழக்கு தனியலகுக் கோரிக்கையை முஸ்லிம்கள் முன்வைப்பது காலத்திற்குப் பொருந்தாத விடயம்.

முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் இருந்து நாம் எவற்றையும் கொண்டு செலலப் போவதில்லை. முஸ்லிம் மக்களுக்குரிய நிலத்தை முஸ்லிம்களுக்கே நாம் ஒப்படைப்போம். இதில் எந்தவிதமான கருத்து வேறுபாடுகளும் இல்லை.

ஆனால் இந்த நிலைப் பாட்டிற்கு முற்றிலும் மாறாக தமிழ்-முஸ்லிம் மக்களிடையே உள்ள சுமுகமான உறவில் விரிசலை ஏற்படுத்தும் பொருட்டு சில தீய சக்திகள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றன. தீய சக்திகளின் இத்தகைய செயற்பாடுகளுக்கு இடம் தராது அனைவரும் விழிப்புடன் செயற்பட வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 2 மணிவரை நடைபெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட கண்காணிப்புக் குழுத் தலைவர் ஹர்ல்யூலியக்கும் கலந்துகொண்டார் (து)

# மதமாற்ற தடைச் சட்டம் விரைவில் கொண்டு வரப்படும்

## அமைச்சர் மகேஸ்வரன் உறுதி

(யாழ்ப்பாணம்)

''மதம்மாறுவதை தடை செய்யக கூடிய சட்டம் பாராளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இச் சட்டத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதர வளிப்பதாக எனக்கு உறுதியளித் துள்ளார்கள்.

இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டி இணுவில் கந்தசுவாமி கோவில் வடக்கு வீதியில் இளந்தொண்டர் சபை ஏற்பாடுசெய் திருந்த இந்து மாநாட்டு சிறப்பு நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் தி. மகேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மதமாற்றத் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பிற்கு விடப்படும் போது உறுப்பினர்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி முன்வரவேண்டும் என்று நான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைக் கோரியுளளேன்.

2004ஆம் ஆண்டு மூன்றாவது உலக இந்து மாநாட்டை யாழ்ப்பாணத்தில் சிறப்பாக நடத்துவதற்கு திருநெல்வேலிப் பகுதியில் சுமார் 5 கோடி ரூபா செலவில் 3000 மக்கள் பங்குகொள்ளக் கூடிய பிரமாண்டமான மணிமண்டபம் ஒன்றை அரசின் ஆதரவுடன் அமைக்க வுள்ளேன். இம்மணிமண்டபத்திற்கான அடிக்கல் மிகவிரைவில் நாட்டப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இந்து மாநாட்டை நடத்தாமல் கொழும்பில் நடத்தியது ஏன் என ஒரு சிலர் என்னிடம் கேட்கின்றனர். யுத்தத்தின் வடுக்களால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் இப்போது தான் இத்தகைய மாநாடுகளைக் காணக் கூடிய தாக உள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் சமாதானத்தில் அதீத நம்பிக்கை வைத்துள்ளார். அவரது நம்பிக்கையும் உங்களின் எதிர்பார்ப்புகளும் ஒரு போதும் வீண் போகமாட்டாது என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின்போது இணுவிலில் புதிய மணிமண்டபம் அமைப்பதற்கான அடிக்கல்லையும் அமைச்சர் நாட்டிவைத்தார். (வ)

# மாவட்ட மட்ட விளையாட்டு போட்டி முடிவுகள்

(சுண்டுக்குளி)

வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடை பெற்று வந்த விளையாட்டுப்போட்டிகளில் மெய்வல்லுநர் போட்டியைத் தவிர ஏனைய போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன.

நடந்து முடிந்த போட்டிகளில் முதல் இரு இடங்களையும் வென்றெடுத்த அணிகளினவிபரம் வருமாறு:

**எல்லே (ஆண்கள் பிரிவு)**
முதலாம் இடம்: பருத்தித்துறை வி.க., இரண்டாம் இடம்: யாழ். வி.க.

**(பெண்கள் பிரிவு)**
முதலாம்இடம்: பருத்தித்துறை வி.க.,இரண்டாம் இடம்: தெல்லிப் பழை வி.க.

**கபடி (ஆண்கள் பிரிவு)**
முதலாம்இடம்: பருத்தித்துறை வி.க., இரண்டாம்இடம்: மருதங்கேணி வி.க.

**(பெண்கள் பிரிவு)**
முதலாம் இடம்: தெல்லிப்பழை வி.க., இரண்டாம் இடம்: பருத்தித் துறை வி.க.

**மென்பந்தாட்டம்(ஆண்கள் பிரிவு)**
முதலாம் இடம்: பருத்தித்துறை வி.க.,இரண்டாம் இடம்: சண்டிலிப்பாய் வி.க.

**(பெண்கள் பிரிவு)**
முதலாம் இடம்: பருத்தித்துறை வி.க.,இரண்டாம் இடம்:நல்லூர் வி.க.

**உதைபந்தாட்டம்(ஆண்கள் பிரிவு)**
முதலாம் இடம்:யாழ்ப்பாணம் வி.க., இரண்டாம் இடம்: சண்டிலிப்பாய் வி.க.

**கரபந்தாட்டம் (ஆண்கள் பிரிவு)**
முதலாம் இடம்:கோப்பாய் வி.க., இரண்டாம் இடம்: தெல்லிப்பழை வி.க.

**(பெண்கள் பிரிவு)**
முதலாம் இடம்: பருத்தித்துறை வி.க, இரண்டாம் இடம்:தெல்லிப் பழை வி.க.

**(கரபந்தாட்டம்)**
முதலாம் இடம்: யாழ்ப்பாணம் வி.க.,இரண்டாம் இடம்: நல்லூர் வி.க.

(உ -110)

# நெறிப்படுத்தப்பட்டதான இந்து மதச் சிந்தனைகளை

# இளைஞர்களுக்கு ஊட்டி நல் வழி காட்டலவசியம்

**வெள்ளி நற்சிந்தனை**


சமகால மெய்யியல் ஆய்வு களின் படி 'ஆதியும் அந்தமும் இல்லாத' பழம்பெரும் சிறப்புக் குரிய,பெருமையுடைய மதம் இந்து மதமாகும்.உலகிலுள்ள மதங் களில் பல்வேறு நெருக்கடிகளுக் கும் மத்தியில் தளிர் விட்டு பிரகா சிப்பது இந்து மதம்.இத்தகைய சிறப் புடைய மதக்கருத்துக்கள் மறைக்கப் பட்டும் சில கால வெள்ளத்தில் அழி வடைந்து இருப்பதும் வரலாற்று ஆய்வுமூலம் அறியமுடிகின்றது. உலகிலேபலகோடி இந்துக்கள் தம் கொள்கைகளைப் பற்றிக் கொள் கின்றனர். சிலர் நம்பிக்கையற்றவர் களாகவும் உள்ளனர். உலகில் எல்லா மதமும் காட்டும் வழி ஒன்று தான். ஆனால் நெறிகள்வேறு பட்ட வையே.சமயங்களில் வழி வேறு, நெறிவேறு என்பது முதன்மையான சிந்தனைக்குரிய விடயமாகும்.வழி என்பது மரபு வழி வந்தது.நெறி என் பது வகுக்கப்பட்டது. இவ்வாறான நிலையில் இந்து மத சிந்தனை களும் நெறிப்படுத்தப்பட்டு ,எல்லைப் படுத்தப்பட்ட பழம்பெரும் சிறப்புக் குரியதே.'மதம் ஆற்றலுக்கு மிஞ் சிய ஒன்றை வணங்கி பணிந்து நடப்பது இறையுருவே!' என்பது இந்து மதம் காட்டும் சிந்தனையாகும். இத்தகைய நோக்கு சீர்மியத்தில் சமயம் கொண்டுள்ள சுபீட்சமாக் காட்சிப் படுத்துவதாக அமைகிறது.இந்து மத சிந்தனைகளின் துல்லியமான கருத்துக்களை அனைவரும் அறிந் திருக்கவேண்டிய பொறுப்பு எல்லா இந்துக்களுக்கும் உரியதே. நாம் அனைவரும் ஏற்கத்தக்கதான தனி பொரு கருத்தைக் காணவேண் டும்.நமது வாழ்வியலில் கடைப் பிடிக்கவேண்டிய பொதுவான அடிப் படைகளை நினைவுபடுத்தவேண் டும்.தனி ஒரு மனிதனிடமும் தனித் துவம் இருப்பது போல, நாடுகளி லும் தனித்துவம் உள்ளது. ஒவ் வொரு நாடும் நிறைவேற்ற வேண் டிய ஒரு இலட்சியம், சாதிக்க வேண் டிய பணி,கொடுக்கக்கூடிய ஒரு செய்தி என உள்ளன.எனவே தமது பிரதேசத்தின் இலட்சியம் எது? இந்து மதத்தின் பணி எது? என பதை அறிந்து இனங்களின் ஒற்று மைக்காக ,சமாதானத்திற்காக செய்யக்கூடிய பங்கு எது? என்பதை இந்துமத சிந்தனைகளிலிருந்து பெற்று வளப்படுத்திக்கொள்ள வேண் டியதேவை இன்று ஏற்பட்டுள்ளது.

### மத ஒற்றுமை அவசியம்

நலிந்துகொண்டிருக்கும் மனித குலத்திற்கு உயிரையும் உத்வேகத் தையும் அளிப்பதற்கு தாயகத்தில் மீண்டும் புதுவாழ்வு வளம்பெற வேண்டும்.பல்வேறு படையெடுப்புக் களும், நூற்றுக்கணக்கான பழக்க வழக்கங்களினால் உருவான அதிர்ச் சிகளாலும் நிலை குலையாது நிற்பது இந்து மதம். சமுத்திரத்தில் இவ்வாறு இருந்தமைக்கு காரணம் எமது பாரம்பரிய தாயகம்,குறைந்த சக்தியுடனும்,அழியா வாழ்வுடனும், எத்தகைய பாறையைவிடவும் உறு தியாக இருந்தமையே ஆகும். இந்து மத சிந்தனைகளில் முக் கியமானது 'மத ஒற்றுமை' பேணப் படவேண்டும் என்பதாகும். பழம் நன் மைக்காகவும் எமது இனத்தின் நனமைக்காகவும் நம்மிடையேயுள்ள சிறு சிறு தவறுகளை விட்டு ,வேற் றுமை,பிரிவினைகளை முற்றாக நீக்கி விடவேண்டும் என நம் சாஸ்திரங்கள் கண்டிக்கின்றன. ஏன்? நமது முன்னோர்களால் கூட அவை தடுக்கப்பட்டு இருக்கின்றன. அதனையே எமது முன்னோர்கள் 'ஜீவரத்தம் ஆன்மீகம்' என உரு வகப்படுத்தியுள்ளனர். அது தெளி வாக ஓடுமானால் வேற்றுமை யின்றி ஒற்றுமையே இருக்கும் என சான்று பகிர்ந்துள்ளனர்.வாழ்க்கை நீரோட்டத்தை விட்டு நாம் விலகும் போதே அழிவு பற்றிக்கொள்கின் றது.

### சமரசம் பேணப்பட வேண்டும்

இந்துமத சிந்தனைகளின்படி சிதறிக்கிடக்கும்ஆன்மீக வலுவை ஒன்றிணைப்பதன் மூலமாகவே உலகில் உள்ள இந்துக்களிடையே ஒருமைப்பாட்டை கொண்டு வர முடி யும். 'ஆன்மீகம்' என்ற ஒரே இராகத் திற்கேற்ற இசைவினாலேயே எமது மதத்தை வளமாக்கிக்கொள்ள முடியும். இந்து மதமானது ' எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி' என்ற உயர் சிந்தனையுடையதாகும் எனவே பிரிவினையற்ற மத வாழ்வு அவசி யம் பேணப்படவேண்டும்.ஆனால் பிரி வுகள் இல்லை என்றால் உலகில் முன்னேற்றமும் இருக்காது என்பது அனுபவமேதைகளின் கருத்து. பிரிவினைவாதம் வேண்டாம் என் பதையே சாஸ்திரங்கள் பகிர்கின் றன.வேறுபாடுகள் இன்றி சமரசம் பேணப்படவேண்டும் என்பதே இந்து மத சிந்தனைகளின் நாதம்ஆகும். இந்து மத சிந்தனைகளில் மத



இரகசியங்களின் அழிவற்ற உபதே சங்களாக 'வேதங்களே' ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இவை ஆலயங் களில் இருக்கும்போது மத வேற் றுமைகளும்,மதப்போராட்டங்களும் இலலாது போய்விடும் என நம்புகின் றோம்.வேதங்களையே நம்முன் னோர்கள் நீதிமன்றமாக பயன்படுத் திக்கொண்டனர். தமது பிரச்சினை களைத் தீர்த்துக்கொண்டனர். இவற் றின் புனிதத்துவம் இன்று கேள்விக் குறியாகவே உள்ளமை வியப்புக் குரியதே.

### இந்துப் பெரியார்களும் இளைஞர்களும்

இந்து மத சிந்தனையில் கடவுள் பறறிய ஏற்கும் மன நிலைபற்றி அறியவேண்டும். படைப்பவர், அனைத் தையும்காப்பவர். உரிய காலத்தில் அனைத்தும் அவரிடமே ஒடுங்குகின றன. ஏனைய காலங்களில் அவரிட மிருந்தே வெளிவந்து பிரபஞ்சம் என அழைக்கப்படுகின்றது என்ற உண்மைஅனைவரிடமும் நம் பிக்கை கொண்டுள்ளது. சிலரிடம் சந்தேகமும்இருக்கவே செய்கிறது. அதற்கு பல காரணத்தையும் முன் வைக்க துணிகின்றனர். நாம் அனைவரும் கடவுளை நம்புகின் றோம். எங்கிருந்து எல்லாம் வருகின் றதோ! எங்கே வாழ்கின்றதோ! எங்கோ எல்லாம் போகின்றதோ! இத் தகைய வியத்தகு சக்தியில் நம் பிக்கைஅற்றவர்கள் என்றால் அவரை இந்து என அழைக்க முடியாது. இவை உண்மை என உணர்ந்த வர்கள் எதிர்கால தலைவர்களான இளைஞர்களிடம் எடுத்துச் சொல்ல வேண்டும்.இது காலத்தின் தேவை யாகும். இந்து மத சிந்தனையில் இளைஞர்களின் பங்கு மிகவும் அவசி யமானதாகும்.எதிர்காலம் என்றால் இளைஞர்களுக்குரிய பொறுப் பையே சுட்டி நிற்கின்றது. எனவே கடந்த காலத்தை விட்டு எதிர் காலம் பற்றி சிந்திப்பது பொருத்தமுடைய தாகும் என பலர் கூறுவதைகேட் கலாம் ஆனால் கடந்த காலத்திலிருந்து தான் எதிர் காலம் பிறக்கிறது என்ற உண்மை மூலமாக பழமையான இந்து மத சிந்தனைகள் ஊடாக இளைஞர்களை நல்வழி காட்ட வேண்டிய பொறுப்பு இந்துப்பெரி யோர்களையே சாரும்.எமது முன் னோர்கள் மகத்தான காரியங் களைச் செய்துள்ளனர் என்பதை கூறி நம்பிக்கை கொள்ளச் செய்ய வேண்டும். இத்தகைய நம்பிக் கையூடாகவும் பழம் பெருமை பற்றிய உணர்விலிருந்தும் சிறப் பானதொரு எதிர்காலத்தை உருவாக்க முடியும் என இளைஞர்கள் திட சங்கற்பம் பூணவேண்டும்.

### வீழ்ச்சியிலிருந்து வெற்றி வாய்ப்பு

இன்றைய இளைஞர்கள், வீழ்ச் சியும் அழிவும்,துன்பமும் ,துயரமும் உள்ள காலகட்டங்களை அதிகம் சந்தித்துள்ளனர்.இத்தகைய பின்னணி யில் நோக்கும்போது 'தோல்வி வெற்றிக்கான படி' என்பதை நினைவு படுத்தவே செய்கின்றது. மரத்திலுள்ள கனிந்த பழமானது வீழ்ந்து பூமியில் அழுகுகிறது.பின்னர் அந்த அழு கலில் இருந்து தான் சுபீட்சமான எதிர்கால மரத்திற்கான முளை வெளியே வருகின்றது.இந்த முளை முதல் மரத்தைவிட மிகவும் பெரிதாக வளரலாம்.இவ்வாறு தாண்டி வரும் அழிவும் வீழ்ச்சியும்துன்பமும் நிறைந்த வரலாற்றுக் கட்டங்கள் தேவையானவைபோல தோன்று கின்து.அதேபோல எமது தாயகம் எங்கும் வீழ்ச்சியிலிருந்து தான் முளை தெரிகிறது.அது கால வெள்ளத்தில் வளர்ந்து பெரு விருட்சமாக உயர்ந்து சிறப்புப்பெறும் என்ற பெரும் நம் பிக்கை உண்டு.

சமகாலத்தில் இந்துமதமும் கொள்கைகளும் புலம்பெயர்ந்துள் ளது .ஐரோப்பாவில் மதக்கொள்கை களைவிட அரசியல் கொள்கைகளே தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின் றன. ஆனால் ஆசியாவில் மதக்கருத் துக்களே தேசியப்பிணைப்பினை உரு வாக்குகின்றன.இவ்வாறான நிலை யில் உலக இந்து மாநாடு பறை சாற்றும் கொள்கையின் மூலம், ஒற்றுமையாக இணைவதன் மூலம், புலம் பெயர் இந்துக்கள் ஒரு கொடியுடன் இணைவதன் பால் தேசிய ஒருமைப்பாட்டை கட்டி வளர்த்து எதிர்காலத்தில் புது வாழ்வுடன் புதுப்பொலிவு காண வேண்டும் என்பது அனைத்து இந்துக்களின் எதிர்பார்ப்பாகும்.

### இலங்கையில் இந்து மத நிலை

இலங்கையில் எமது மதத்தின், இனத்தின் சரித்திரத்தை பற்றி நூல்கள் கூறியதை விட ஆழ்ந்த வேதனையான பல கருத்துக்களை கோயில்களில் காணலாம்.யுத்த அனர்த்தங்களினால் ஏற்பட்ட அழிவுகளை நேரடியாகவும், ஆலய நிர்வாகிகளின் முரண்பாடுகள், பிணக்குகளை மறைமுகமாகவும் அவதானிக்கமுடிகின்றது. இவை வேதனை தரும் விடயமாகவே உள் ளன.இந்துமதம் பரந்த மனப்பாங்கை கொண்டிருப்பதை அனைவரும் ஏற் றுக்கொள்கின்றனர். இன்று அவ் வாறான இயைபு காணப்படவில்லை என்பது வெளிப்படையான விடயமா கும். எனவே விவேகானந்தர் விரும் பியதுபோல 'கோயிலோடு தொடர் பான பயிற்சி நிலையங்களும்,போத னைக்கூடங்களும் இருக்கவேண்டும்'

இந்து மத சிந்தனையின் காட்சி யில் இளைஞர்கள் பற்றிய உண் மைகளை காணலாம். இளமையும், வலிமையும்,ஆரோக்கியமான, கூர்மையான அறிவும் உள்ளவர்கள இறைவனை அடைய முடியும் என வேதங்களில் காணலாம்.எதிர் காலம் பற்றி சிந்தித்து செயற் படக்கூடிய பொருத்தப்பாடுடைய வேளை இளமைத் துடிப்பு ததும் பும்நேரம் தான். சுவாமி விவேகா னந்தர் கூறிய வார்த்தை இது. 'இனத் தின் நன்மைக்காகவும்,மனித சமுதாயத்தின் நன்மைக் காகவும் நீங்கள் உங்களை தியாகம் செய்து கொள்வது உயர்ந்த வேலை' என இளைஞர்களுக்கு சிறப் பாகக் கூறியுள்ளார்.

### இந்து மதச் சிந்தனைகள் சிறப்புறுக

இந்து மதமானது சமத்துவ நிலையை எய்தவேண்டும். மதம் அனைவரினதும் அன்றாட வாழ் வில் கொண்டுவரப்பட வேண்டியதா கும்.'மதமானது மன்னன் மாளிகை தொடங்கி ஏழை விவசாயியின் குடிசையிலும் நுழைய வேண்டும்' என்ற சுவாமி விவேகானந்தரின் கனவு நனவாக வேண்டும். கடவுள் தந்த காற்றுப்போல சுதந்திரமும் மலர வேண்டும். சம காலத்தில்

நடராசா திருவாசகன்
ஆசிரியர்

எம்மிடையே பலசீர்திருத்தவாதிகள் தோன்றி விட்டனர். அவர்களைப் பார்க்கும்போது சீர்திருத்துவதை விட தலைகீழாக மாற்றி அமைக்க முற்படுபவர்கள் போல தெரிகி றது.இவர்களிடையே உண்மையான சிந்தனையாளர்கள் பலர் இருப்பதைக் காணலாம்.சிலர் அந்நிய கருத்தைப் புகுத்த முற்படுவதையும்அவதானிக் கலாம்.இந்துமதத்தில் உள்ள உருவ வழிபாட்டை சிலர் மறுக் கின்றனர். உருவ வழிபாடு என்றால எனன என சிந்திப்பதற்கு இவர்களுக்கு ஒரு கணம்கூட நேரம் இருப் பதில்லைபோலும்.இன்று ஆலயங் களில் போட்டி,முரண்பாடுகளால் நீதி மன்றங்களில் தவம் கிடந்து வரம் பெறும்கதி ஏற்பட்டிருப்பது இளைஞர்களுக்கு வியப்பை ஏற் படுத்தியுள்ளது.முன்னுதாரணமாக திகழவேண்டியவர், இன்று சந்தர்ப் பத்துக்கேற்ப இந்து மத சிந் தனையை மாற்ற முற்படுவதை அறிய முடிகின்றது.இவை தடுக்கப் பட்டு ஆலய பரிபாலனம்,சமய வாழ்வு என்பன சீர்ப்படுத்தப்படும் போதே இந்துமத சிந்தனைகள் சிறப்புப்பெற்று இளைஞர்களும் விருப் போடு சமய விழுமியங்களை பேண விரும்புவர்.

விதை முற்றிலுமாக மாற்றத்திற் குளளாகிறது.சிலர் அப்போது அழிந்து விட்டதாக கருதுவர்.ஆனால் அதுதான் வீழ்ச்சியிலும் எழுச்சியாக வளரும்.இவ்வாறே கடந்தகாலத் தின் வீழ்ச்சிதான் நாளைய மகோன்ன தமான எதிர்காலம் இப்போது மறைந்து கிடக்கிறது என்பதை நினைவுபடுத்துகிறது. □

## கலாசார விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாயன்மார்கட்டு மகேஸ் வரி வித்தியாசாலையின் இந்து மன்றம் நடாத்தும் இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய கலாசார விழா இன்று காலை 9மணிக்கு வித்தியசாலை மண்ட பத்தில் அதிபர் சு. சிவபாதசுநதரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓயவு பெற்ற அதிபர் க.சண்முகலிங் கம் கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து சொற்பொழிவு,நாடகம், பண்ணிசை, பேச்சு, பக்தி பாடல்கள என்பன இடம் பெறவுள்ளன. (உ)

## தாச்சிப் போட்டி

(யாழப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணாவிளை யாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையு டன் அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் 4வது சுற்றில் இன்று மயிலிட்டி வள்ளுவர் விளையாட்டுக்கழகமும், சுன்னா கம் கலைவாணி விளையாட்டுக்கழக மும் பங்குபற்றவுள்ளன. (உ-10)

## திடீர் பரிசோதனை

(சுதுமலை)

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வட்டுக்கோட்டை, அராலி, சித்தன்கேணிப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்கள், பலசரக்குக் கடைகள் என்பன கடந்த திங்கள், செவ்வாய்கிழமைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவின ரால் பரிசோதனைக்குட்படுத்தப் பட்டது.

இதன்போது, பல வர்த்தகநிலை யங்களில் காலாவதியான உண வுப்பொருட்கள், பால்மாப்பைக் கேற்றுகள், பிஸ்கட் வகைகள் போன்றவை விற்பனைக்கு வைக் கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப் பட்டு அழிக்கப்பட்டன. (உ-252)

## நட்டஈடு வழங்க நிலையான திட்டம்

(கொழும்பு)

பஸ் விபத்துக்கள் மூலம் உயிரி ழப் பவர்களுக்கு நட்டஈடுவழங்கு வது பற்றிய நிலையான ஒரு திட் டத்தை அமுல்படுத்த அரச போக்கு வரத்து அமைச்சு நடவடிக்கை எடுத துள்ளது.

இதேவேளை, பிரதமர் ரணில்விக் கிரமசிங்கவின் ஆலோசனைக் கமையவே இத்திட்டம் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக அரச போக்குவரத்து அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் விபத்துக்களில் உயிரிழப்பவர்களிற்கு வழங்கப் படும் நட்டஈட்டை அதிகரிக்கவும், துரித மாக வழங்கவும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக அமைச்சர் உபாலி பியசோம தெரிவித்தார். (உ-10)

## சமாதான முன்னெடுப்புக்கு வேண்டிய நிதியைத் திரட்ட பொதுநிதியம் அமைப்பு

(கொழும்பு)

சமாதானத்தை முன்னெடுப் பதற்குத்தேவைப்படும் நிதி வசதி களைத் தேடிக்கொள்வதற்காக பொது நிதியம் ஒன்று ஆரம்பிக் கப்படவுள்ளது.

இது பற்றி மக்கள் சமாதான முன்னணியின் பேச்சாளர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

தேவைப்படும் நிதி உள்நாட்டி லும் வெளிநாடுகளிலும் இருந்து சேகரிக்கப்படும். இதில் சமாதான அமைப்புக்கள்,தனியார் நிறுவனங் கள்,சர்வதேச பங்காளர்கள்ஆகிய தரப்பினரின் பங்களிப்புகள் பெற் றுக்கொள்ளப்படும்.

இவ்வாறு திரட்டப்படும் பணம் சமா தான முன்னெடுப்புகளுக்கு செல விடப்படும் அதேவேளை, செலவினங் கள் மிகநன்றாக ஆராய்ந்து தேர்ந் தெடுக்கப்பட்டதாக இருக்கும்.

இந்த நிதியம் தெஹிவளையில் உள்ள மார்க்க நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் வைத்து நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இதில் கலந்து கொள் ளுமாறு சமாதான விரும்பிகள், குழுக்கள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றுக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.

இந்த நிதியத்தின் பிரதான நோக் கமானது,அரச சார்பற்ற நிறுவனங் கள்,பாடசாலைகள்,தனிப்பட்டவர்கள் ஆகியோருக்கு தேவை அடிப்படை யில நிதி உதவி வழங்குவதும் அதன் மூலம் இவ்வமைப்புகளை சமாதா னத்திலும், நல்லிணக்க நடவடிக்கை களிலும் ஈடுபடவைபபதுமாகும். (உ)

தரம் 09 மாணவர்களுக்கான

கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/-,500/-,250/-
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : ''தாய் அன்பிற்கு நிகரேது''

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

இணைக்கும் பத்திரம்

கட்டுரைப் போட்டி இல-3

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :-------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்

## இன்று ஒரு தகவல்

# வாழ்வில் எது மகிழ்ச்சி?

''அவருக்கு என்ன சார் கொடுத்து வைத்த மனிதன்!'' என்று ஒருவரைச் சுட்டிக்காட்டிச் சொன்னார் ஒரு நண்பர். ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்? என்று கேட்டேன். ''சொந்தமாக ஒரு கார் வைத்திருக்கிறார், அழகான பங்களா கட்டியிருக்கிறார். அப்புறம் சந்தோஷத்திற்கு என்ன குறை?'' என்றார். அவர் நினைப்பது மாதிரித்தான் நம்மில் பலர் நினைக்கிறார்கள். ஆனால் ஓஷோ போன்ற பெரியவர்கள் அப்படி நினைக்கவில்லை. நாங்கள் எப்படி நினைக்கிறோம்? ஓர் அழகான வீட்டிலிருக்கிறோம். அது நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கிறது. ஓர் அழகான காரில் போகிறோம். அது ஏற்படுத்துகிற அந்த ஹம்மிங் ஒலியே நம்மைப் பரவசப்படுத்துகிறது. அதனால் நம்முடைய உண்மையான மகிழ்ச்சிக்கு இந்த வீடும் காரும் தான் காரணம் என்று நினைக்கிறோம். ஆனால் உண்மையில் அப்படியில்லை!

இந்த வீடும், காரும் நமது மகிழ்ச்சிக்கு ஒரு தூண்டுகோல் அவ்வளவு தான்! இந்தப் புறப் பொருள்கள் இல்லாமலேயே கூட எல்லையற்ற ஆனந்தத்தில் நாம் மூழ்க முடியும். அதை புரிந்து கொள்ளாமல் வீடு, கார், நிலம், புகழ், பதவி இப்படி உலகப் பொருள்களை சேகரிப்பதிலேயே நம்முடைய சக்தியை வீணாக்குகிறோம். நமக்குள்ளே ஒரு விழிப்பு ஏற்படுகிற போது நாம் சேகரித்த பொருள்கள் நமக்குச் சுமையாகவே இருக்கும். அவற்றைப் பாதுகாப்பதற்கே நமக்கு நேரம் சரியாக இருக்கும். இதற்கு என்ன காரணம் என்று நினைக்கிறீர்கள்? இந்த உலகத்திலே எவைகள் நமக்கு ஆனந்தத்தைக் கொடுக்கின்றனவோ அவற்றையெல்லாம் நாம் நமக்கு உடமையாக ஆக்கிக் கொள்வதற்கு ஆசைப்படுகின்றோம்.

எந்தப் பொருள் மீதும் பற்று வைக்காதீர்கள்- ஆசை வைக்காதீர்கள். ஆனால் அவைகளை வெறுமனே உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள்! அவைகள் எல்லாமே உங்களுடைய சௌகரியத்துக்காக ஏற்பட்டவை. அவ்வளவு தான்! என்று அனுபவப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள். இன்னொரு விஷயத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இது மாதிரி அறிவுரைகளை சும்மா கேட்டுக் கொண்டிருப்பதனாலேயோ அல்லது இவைகளை ஆராய்ச்சி பண்ணிக் கொண்டு இருப்பதனாலேயோ எந்தப் பிரயோஜனமும் ஏற்படப் போவதில்லை. இவைகளையெல்லாம் நாம் அனுபவத்துக்குக் கொண்டவர வேண்டும். அப்போது தான் அவை நமக்கு உபயோகப்படும். அனுபவமற்ற அறிவு எதற்கும் உபயோகப்படாது! இவைகள் எல்லாம் பெரியவர்கள் சொல்கின்ற கருத்து.

அவர்களுக்கு என்ன... சுலபமாக எல்லாவற்றையும் சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்கள். ''மரணம் வாழ்வுக்கு எதிரியில்லை'' என்கிறார்கள். அதற்காக அதைக் கண்டு பயப்படாமல் இருக்க நம்மால் முடிகின்றதா? அவர்கள் ''மரணம் என்பது வாழ்வுக்கு எதிரியல்ல. உண்மையில் வாழ்விலே தான் மரணமும் அடங்கியிருக்கிறது. மரணம் இல்லாமல் வாழ்வு முழுமை பெறாது. மரணம் தான் வாழ்வுக்கு ஆதாரம். வாழ்வின் கவர்ச்சிக்கும், ஆனந்தத்திற்கும் ஆவலுக்கும் மரணம் தான் ஆதாரம். கொஞ்சம் ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள்... புரியும'' என்று சொல்கிறார்கள். அதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. பின் எங்கே சிந்திப்பது? அவற்றையெல்லாம் விடுங்கள் சார்! இப்போது நமது கதைக்கு வருவோம். ஒரு சாலையில் திடீரென்று ஒரு விபத்து. கார் ஒருவரை மோதிவிட்டுப் போய்விட்டது. அடிபட்டவன் கீழே விழுந்து விட்டான். கும்பல் கூடிவிட்டது. ஒரு அம்மா ஓடிப்போய் அடிபட்டவனிடம் உதவி பண்ணுவதற்குக் குனிந்தார். அதற்குள் இன்னொரு ஆள் வேகமாக ஓடிவந்து அந்த அம்மாவை விலகி நிற்கச் சொல்லிவிட்டு அடிபட்ட ஆளின் அருகில் உட்கார்ந்தான். எனக்கு முதலுதவி பண்ணத்தெரியும். முதலுதவி பற்றிப் படித்திருக்கின்றேன். எல்லோரும் விலகி நில்லுங்கள் என்று சொல்லிவிட்டு அந்த ஆளுக்கு முதலுதவிச் சிகிச்சைகளைப் பண்ண ஆரம்பித்தான். அந்த அம்மா அவனைப் பார்த்து ''இதோபாரப்பா! உன்னுடைய முதலுதவி சிகிச்சைகள் முடிந்து டாக்டரிடம் கொண்டு போகலாம் என்கின்ற கட்டத்தில் என்னிடம் சொல்லு'' என்றார். ''ஏன்?'' என்று கேட்டான் அவன். ''நான் தான் டாக்டர்'' என்றார் அந்த அம்மா!

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# வட-கிழக்கு நிலைவரத்தை நேரில்சென்று அறிவதில் நோர்வேத் தூதுவர் ஆர்வம்

(வவுனியா)

கடந்தசெவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்து உயர் பாதுகாப்பு வலயம், மற்றும் கண்ணிவெடியகற்றும் பணிகள் என்பவற்றைப் பார்வையிட்ட நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம நேற்றுமுன்தினம் வவுனியா சென்று அங்குள்ள நிலைமைகள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார்.

அரசாங்க அதிபர் கே.கணேசைச் சந்தித்து சில மணித்தியாலங்கள் வவுனியா மாவட்டத்தின் புனர்வாழ்வு நடவடிக்கைகள், இடம் பெயர்ந்த மக்களுடைய நிலைமைகள், உயர்பாதுகாப்பு வலயம், கண்ணி வெடியகறறும் பணிகள் என்பன குறித்து விரிவாக சொல்ஹெய்ம் ஆராய்நதார்.

வவுனியா செயலகத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்,

யப்பானில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டில் புலிகளும் அரசாங்கமும் கலந்துகொள்ளாவிட்டால் வடக்கு-கிழக்குப் பகுதியின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், விடுதலைப்புலிகளின் கட்டுபபாட்டு பிரதேசத்திற்கும் கிடைக்கவுள்ள நிதியுதவிகள் குறைவடைய நேரிடும்.

இது சமாதானமுயற்சிகளுக்கு ஒரு பின்னடைவை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்;

வடபகுதியில் மக்கள் தமது சொந்தஇடங்களுக்கு திரும்பி தம்வாழ்வை மீளக்கட்டியெழுப்பி வருவதை நேரிற்கண்டறிந்தேன். நிறுவன ரீதியாக, இடம் பெயர்ந்த மக்கள் மீளக்குடியமரும் பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

மீள்குடியேற்றப் பணிகளுக்கு அவசியமான உட்கட்டமைப்புக்களை நிர்மாணிக்கும் பணிகள் இன்னும் அங்கு ஆரம்பிக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டினார்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்படுவதற்கு இத்தகைய விடயங்கள் தடையாகயிருந்தாலும் அவற்றைப் பேச்சுக்களின்மூலம் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இவ்விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று அவர் மன்னாருக்கு சென்றமை குறிப்பிடத்தக்கது. (உ)

## சமாதானப் பேச்சுமேசையில்

# முஸ்லிம் பிரதிநிதிகளின் பிரசன்னம்குறித்து பிரதமரிடம் வலியுறுத்தத் தீர்மானம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிற்கும் ஸ்ரீலங்காஅரசிற்கும் இடையில் இடம்பெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவேண்டும்.

அப்பிரதிநிதிகள் அமைச்சர்களான ரவூப்ஹக்கீம், எம். எச். எம். முகமட் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.ஏ.பௌசி ஆகியோரின் கூட்டுத்தலைமையில் இயங்கும் சர்வகட்சிகளையும் சேர்ந்த முஸ்லிம் பாராளுமன்ற பிரதிநிதிகள் ஒன்றியத்தின் மூலமாகவே தெரிவுசெய்யப்படவேண்டும் என்று அரசை கோருவதுஎனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஒன்றியத்தின் விஷேட கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றக் கட்டடத்தொகுதியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கப்பல் துறைமுக அபிவிருத்திஅமைச்சர் ரவூப் ஹக்கீம், நகரப்பொது வசதிகள் அமைச்சா எம்.எச்.முகமட பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம்.பௌசி, பாராளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர்காசிம், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எல்.ஏ.அதாவுல்லா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் ஏ.எல்.எம். ஹெவரத், ரிசாத் பதியூதீன், என்.எம். மஃரூத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக ஒன்றிய பிரதிநிதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை விரைவில் சந்தித்துப் பேசுவதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-10)

## இராசி பலன்

09.05.2003
(சித்திரை 26,வெள்ளி)
அட்டமி - ந.இ. 12.04 வரை
ஆயிலியம் மு.இ. 10.36 வரை
இராகுகாலம் - 10.24 - 11.54
சுபநேரம் - 5.54 - 7.24

**மேடம்**
புத்திசஞ்சலம்,தனவிரயம், உஷ்ண வியாதி, காரிய தாமதம்,

**இடபம்**
பெண்கள் நட்பு, மனோதைரியம், விருந்துபசாரம், நற்கீர்த்தி

**மிதுனம்**
அதிகசெலவு, போசனசுகக்குறைவு, பதட்டநிலை, காரியதாமதம்

**கடகம்**
வெகுமானம், தெய்வதரிசனம், எடுத்த கருமங்கள் கைகூடும், பிறர்உதவி

**சிங்கம்**
சோம்பல்நிலை, மனப்பயம், எடுத்த காரியம் தாமதமாகும், நித்திரைக் குழப்பம்

**கன்னி**
சிநேகிதர் நல்வரவு, ஆனந்தம், தன தானியம்கிடைக்கும், முயற்சி கைகூடும்

**துலாம்**
நன்கொடை, இஷ்டசித்தி, மேன்மையடைதல், ஆரோக்கியம்

**விருச்சிகம்**
எதிர்பாராத செலவு, உத்தியோகபங்கம், நிர்ப்பந்திக்கப்படல், புதியமுயற்சி

**தனுசு**
முழங்கால்வலி, பொருள்விரயம், முயற்சி தடங்கல், அதிகவார்த்தை

**மகரம்**
சௌபாக்கியம, தெய்வதரிசனம், காரியம் கைகூடும், சகோதரர் வழிநன்மை

**கும்பம்**
விரும்பிய பொருள் கிடைக்கும் வாய்ப்பு, தொழில்விருத்தி, வாக்குப்பலிதம், உடல் நலம்

**மீனம்**
பணக்குறைவு, அஜீரண ரோகம், காரிய தாமதம், வியாபாரநன்மை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**வளவன்.**

## அரச பணியாளர்களுக்கு

# இரண்டாம் மொழிப்பயிற்சி

(யாழ்ப்பாணம்)

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசகரும மொழித்திணைககளத்தின் அனுசரணையுடன் சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிப்பயிற்சிகள் இரு நிலைகளில் (அடிப்படை மட்டம், உயர் மட்டம்) பிரதேச ரீதியாகவும் அகில இலங்கை ரீதியாகவும் நடாத்தப்படவுள்ளது.

இப் பயிற்சிகளை நடாத்துவதற்கு போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மொழியை ஒரு பாடமாகக் கொண்ட பட்டத்தகைமை உடையவர்களும் குறித்த மொழியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் ஓய்வு பெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுய விபரத்தை தயாரித்து இம்மாதம் 13ஆம் திகதிக்கு முன்னர் யாழ். வலய கல்விப் பணிமனைக்கு கிடைக்கச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

# ஹற்றனில் மண்சரிவுஅபாயம் பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கொழும்பு)

ஹற்றன் கல்வி வலயத்தில் மண்சரிவு அபாயம் காரணமாக இரண்டு பாடசாலைகளை ஒரு வார காலத்திற்கு மூடிவிடுமாறு மத்திய மாகாணக் கல்வி அமைசசர் வி.ராதாகிருஷ்ணன் பணிப்புரை விடுத்துள்ளார்.

இப்பிரதேசத்தில் தற்போது பெய்து வரும் கடும் மழை காரணமாக கணபதி தமிழ் மகா வித்தியாலயம் நோன் பிறிஜ் விதுவிபுர சிங்கள மகாவித்தியாலயம் ஆகியவற்றின் முன்புறமும் பின்புறமும் உள்ள மண் மலை சரிந்து விழும் அபாயம் உள்ளதாலேயே இவற்றை மூடுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. (உ-10)

# கற்பகதரு கடன் திட்டம் தொடர்ந்தும் முன்னெடுப்பு

(கொழும்பு)

கற்பகத்தரு கடன் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல் வதென தெங்குபயிர்ச்செய்கை சபை தீர்மானித்துள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டிருப்போரை ஊக்குவிப்பதே இத்திட்ட முன்னெடுப்பின் நோக்கமாகும்.

இதற்கமைய தெங்குப் பயிர்ச செய்கை மேற்கொள்ளப்படும் காணியின் விஸ்தீரணத்திற்கு அமைய கடன்கள் வழங்கப்படவிருக்கின்றன.

புதிதாக தெங்குப் பயிர்ச் செய்கையை ஆரம்பிப்பவர்களுக்கு விரைவில் பல்வேறு வடிவங்களில் கடன் உதவிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. (உ-10)

*மலர் மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்*
*– குறள்*

# வலம்புரி

## எழுமின்! விழிமின்!

2-வது உலக இந்து மாநாட்டை ஒட்டிய பிராந்திய மாநாடு இன்று யாழ்ப்பாணத்தில் மிக எழுச்சிபூர்வமாக ஆரம்பமாகிறது. எங்கும் விழாக் கோலம் பூண்டுள்ள யாழ்ப்பாணத்தைப் பார்க்கும போது நெஞ்சம் நெகிழ்கிறது. 20 வருட கால யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்குண்டிருந்த யாழ்ப்பாணத்தில் நந்திக் கொடிகள் ஆடி அசையும் காட்சி ஈழத்தைச் சிவபூமி என்று வர்ணித்த திருமூலரின் கணிப்பை உறுதிப்படுத்தி உள்ளது. இங்கே நம் இளம் சமூகத்தினர் இந்து தர்மத்தை மறந்து விடுவார்களோ என்ற பெரியோர்களின் ஏக்கம், இந்து மாநாடு கண்ட எழுச்சியோடு தணிந்து போயிற்று. வீடுகள், வர்த்தக நிலையங்கள், கல்லூரிகள், வளாகங்கள் என எங்கும மகர தோரணங்களும் நந்திக் கொடிகளும் ஆடி அசைந்து நாள் என் செய்யும், வினை தான் என் செய்யும், எமை நாடி வந்த கோள் என் செய்யும், கொடுங்கூற்று என் செய்யும் எனக் கோஷம் போடுகின்றன.

ஈழத்திருநாட்டில் நடைபெறுகின்ற 2-வது உலக இந்து மாநாடு ஓர் தனிச் சமயத்திற்குரியதன்று. எச்சமயத்தவர்களும் அதன் தத்துவங்களை உணர்ந்து கொள்வது அவசியமாகும்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் திருமதி கலைவாணி இராமநாதன் அவர்கள் கூறியது போல் இந்துமதம் ஓர் வாழ்க்கைநெறி. அது மனிதன் வாழவேண்டிய வழிமுறைகளைப் பட்டியலிட்டுத் தந்துள்ளது. அதனை எவரும் ஒரு தரப்புச் சமயமாகக் கருதக் கூடாது.

அவரின் கருத்து இங்கு கூர்ந்து நோக்குவதற்குரியது. தர்மம் இல்லாத உலகம், நின்று நிலைக்க முடியாதது. இதனையே, எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. உன்னைப் போல் பிறரையும் நேசி என்ற யேசுபிரானின போதனையும், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாதே என்ற புத்தபிரானின் வார்த்தையும், பிறருக்காக வாழ் என்ற நபிகள் நாயகத்தின் கருத்தும் மனிதனை மனிதனாக வாழ வைப்பவை. அச்சமயங்கள் கூறுகின்ற அனைத்துப் போதனைகளும் இந்து தர்மத்திற்குள் அடங்கியிருப்பது மிகப் பெரும் அற்புதமாகும். அவ்வகையில், இந்து கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனால் முன்னெடுக்கப்பட்டுள்ள உலக இந்து மாநாடு, மிகப்பெரியதொரு எழுச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உலக இந்து மாநாடு ஏற்படுத்திய எழுச்சி நிச்சயம் இந்நாட்டிலிருந்து தர்மத்தை நிலைக்கச் செய்து சமாதானத்தை ஏற்படுத்தப் போவது திண்ணம்.

# சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இலங்கைப்பெண்களை இணைக்கவேண்டும்

## கனடா உயர்ஸ்தானிகர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களிலும் அதுதொடர்பான தீர்மானங்களை எடுப்பதிலும் பெண்களின் பங்களிப்பை இணைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்று கனடாவின் உயர்ஸ்தானிகர் ஸ்ரீமதி வலேறி றேமொன்ட் தெரிவித்துள்ளார்.

தாஜ்சமுத்திரா ஹோட்டலில் கடந்த திங்களன்று இடம்பெற்ற சக்திபால் நிலைச் சமத்துவத்திட்ட மாநாட்டில் கலந்துகொண்டு பேசிய போது இவ்வாறு குறிப்பிட்ட வலேறி மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உள்ளூர் சமூகத்துடன் இணைந்து பல பெண்கள் அமைப்புகள் செயற்படுவதை நான் அறிவேன் சமாதானத்தை கொண்டு வருவதற்கு இலங்கையர் ஒவ்வொருவரும் இணைந்து முக்கிய பங்காற்றுகின்றனர்.

மேலும் பதற்றத்தினால் இனங்களுக்கிடையே பிரச்சினைகள் ஏற்படும்போது பெண்களே அதை தீர்த்து வைக்கும் பாலமாக செயற்படுகின்றனர் என ஐ.நா.செயலாளர் கோபி அனான் தனது பெண்கள் தின உரையில் தெரிவித்துள்ளார் என்பதையும் நினைவு கூர்ந்தார்.

தொடர்ந்தும் கருத்துக்கூறுகையில்,

பிளவுபட்ட சமூகங்களை ஒன்றிணைக்கும் செயற்பாட்டில் முக்கிய பங்காளிகளாக பெண்கள் இருப்பது அனைவரும் அறிந்தஉண்மை. தற்போது குவாட்டமாலா, எல்சல்வடோர் போன்ற நாடுகளில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்ததைத் தொடர்ந்து பெண்கள் மீள்புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதை காண்கிறோம்.

எரித்திரிய தலைநகர் அஸ்மாறாவில் வயதானவர்களில் இருந்து இளம்பெண்கள்வரை அனைவருமே ஒற்றுமையாக போரை முடிவிற்கு கொண்டுவர செயற்பட்டதை அறிவோம்.

ருவாண்டா, சோமாலியா, சூடான், பிலிப்பைன்ஸ், சியோராலியோன் போன்ற நாடுகளில் நிலவிய இனவேறுபாடுகளை தளர்த்துவதில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது.

கனேடிய சர்வதேச அபிவிருத்தி நிலையம் சக்தி பால் நிலைச் சமத்துவத்திட்டத்துடன் சேர்ந்துள்ளது. இனி வரும் காலங்களில் இலங்கையிலும் உள்நாட்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களிடையே இன ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்குடனேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் கனேடியத் தூதுவர் மேலும் தெரிவித்தார். (உ)

# கிழக்கு மாகாணத்தில் நிலவும் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண இணைந்து செயற்பட புலிகள் இணக்கம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் சமூகத்தவர்களிடையே நிலவும் நெருக்கடிகள் பற்றிய பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கும், காணிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் விடுதலைப் புலிகள் இணங்கியுள்ளதாக போர் நிறுத்த கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஆலடி வேம்படிப் பிரதேச செயலகத்தில் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கப்பாட்டை விடுதலைப் புலிகள் வெளியிட்டனர்.

இந்நிகழ்வில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிராந்தியத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும், இக்கலந்துரையாடலில் இரு சமூகத்தவர்கள் மத்தியில் கருத்து உடன்பாடு ஒற்றுமை இல்லாமல் எந்தவொரு பிரச்சினைக்கும் நிலையான தீர்வு காண முடியாது என்பதை சம்பந்தப்பட்டவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக 4 வலயங்களை உருவாக்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் அம்பாறை மாவட்டத்தில் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்குவதாக இவ் வலயங்கள் காணப்படும்.

ஒவ்வொரு வலயக்குழுவிலும் இரு சமூகத்தவர்கள் சார்பிலும் தலா 6 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இக்குழுக்கள் எதிர்வரும் 19,20, 21, 22 ஆம் திகதிகளில் கூடவிருக்கின்றன. இதன் பிரதான குழுவின் கூட்டம் யூன் மாதம் 10 ஆம் திகதி நடைபெறும் எனவும் கண்காணிப்புக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (உ-10)

# 29-வது விளையாட்டு விழா யாழில்; இந்த முடிவில் எந்த மாற்றமுமில்லை

## விளையாட்டுத்துறை அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சினால் நடத்தப்படவுள்ள 29 வது தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்திலேயே நடாத் துவது என்ற முடிவில் எந்தவித மாற்றமும் இல்லையென விளை யாட்டுத் துறை அமைச்சர் ஜோன்ஸ் ரன் பெர்னாண்டோ தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படவுள்ள 29 வது தேசிய விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்த அரசு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இவ் விளையாட்டு விழா நடைபெறுவதற்கான சாத்தியம் எதுவும் இல்லையென மக்கள் தரப்பில் வீண் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அரசின் தீர்மானத்தில் எந்த வித மாற்றமும் இடம்பெறாதமையினால் யாழ்ப்பாணத்திலேயேஇவ் விளையாட்டு விழா நடைபெறும்.

அத்துடன், முன்னர் நிர்ணயிக்கப்பட்டவாறு 12 விளையாட்டுக்களுடன் கூடிய இந்நிகழ்வு எதிர்வரும் செப்ரம்பர் மாதம் யாழ் நகரில் ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு முன்னோடியாக மரதன், கால்பந்தாட்டப் போட்டிகள் இம் மாதம் 22 ஆம் திகதி மகியந்தனையில் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (உ-10)

# ஐம்பது வீடமைப்புத் திட்டம் நிறைவுற்றது

(சில்லாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஊடாக சிறுவர் பாதுகாப்பு நிதியம் கடந்த மாத காலமாக மேற்கொண்டு வந்த தற்காலிக வீடமைப்புத்திட்டம் நிறைவுற்றுள்ளது.

இதன் பிரகாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பின்தங்கிய கிராமங்களான மாதகலில்-19 வீடுகளும், பிரான்பற்றில் -14 வீடுகளும்,சண்டிலிப்பாய் வடக்கு மண்டு மண்டையில்-5 வீடுகளும், சாந்தையில் -4 வீடுகளும், மானிப்பாய் உச்சியோடையில் 3 வீடுகளும்,ஆனைக்கோட்டையில்-3 வீடுகளும், கட்டுடையில் 2 வீடுகளுமாக மொத்தம் 50 வீடுகள் அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இது போன்ற செயற்பாட்டுத் திட்டங்களை தொடர்ந்தும் பல்வேறு பிரதேச செயலகங்களில் நடைமுறைப்படுத்தவும், மேற்படி நிறுவனங்கள் இரண்டும் தீர்மானித்து வருகிறது.

இதேவேளை, இத்தகைய வீடுகள் கடந்த கால வன்முறைகளின் போது பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்து மீளக் குடியமர்ந்து வாழ்பவர்களுக்கே வழங்கப்படவுள்ளன. (உ-58)

## தினசரி தியானம்

### நிர்விகல்ப சமாதி

வாழ்க்கையின் நுட்பத்தை, வெளிப்படுத்தும் அருள் பெற்ற நிலையே தியானிப்பவர் உறக்கமற்ற உறக்கத்தில் நுழையும் அமைதியான அருள் நிலையே நிர்விகல்ப சமாதியாகும். இது ஒரு மயக்க நிலை அன்று. இது தியானிக்கிற பொருள்களை அவை உள்ளவாறே காட்டுவது. நிலையான அமைதியை அனுபவிக்கச் செய்வது. மெய்மையை தீவிரமாக உணர்த்துவது. எல்லாவகை இருமைகளையும் எல்லைகட்கு அப்பால் கடத்துவது. இதுவே முழுமை பெற்ற அனுபவ சமாதி நிலை ஆகும். நிறைவான திருப்தி இங்கே நிலவும்.

சுவாமி சிவானந்தர்

## கலந்துரையாடல்

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட அனைத்து விளையாட்டுக்கழகங்களுக்குமான விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது. (உ-12)

## அடிக்கல் நாட்டல்

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியில் புதிதாக இரண்டு மாடிக் கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல்லை பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் நேற்று முன்தினம் நாட்டிவைத்தார்.

இந்த கட்டடத்திற்கான நிதியினை 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-63)

## சமுர்த்தி வங்கி திறப்பு

(காரைநகர்)

காரைநகர் பிரதேச சமுர்த்தி வங்கி இன்று பிற்பகல் 2.30மணிக்கு காரைநகர் பிரதான வீதியில் யாழ்ரன் கல்லூரிக்கு முன்பாக திறக்கப்படவுள்ளது. காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே. சாம்பசிவம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ. பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் என். சிவபாலசுந்தரம் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் எஸ். மகேஸ்வரகுமார், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டுத் துறை பொறுப்பாளர் மாதுலன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையைச் சேர்ந்த சமுர்த்தி முகாமையாளர் எல்.எம். லியோனிகா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-246)

## சிறப்பு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

2-வது இந்து மாநாட்டையொட்டிய சிறப்பு நிகழ்வுகள் இன்று யாழ். கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலத்தில் முற்பகல் 10மணிக்கு அதிபர் சு. சண்முககுமார் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இதில் சிறப்பு சொற்பொழிவு, பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளன.(உ)

★ ★

(யாழ்ப்பாணம்)

2-வது உலக இந்து மாநாட்டையொட்டி இன்று காலை 8.30மணிக்கு யாழ். இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன.

இந் நிகழ்வில் பிரதமகுரு க. மகாகணபதீஸ்வரக் குருக்களின் ஆசியுரையும், பா. குகபிரசாந்தனின் சிறப்புத் சொற்பொழிவும், தொடர்ந்தும் ஆசிரியர் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ)

★ ★

(யாழ்ப்பாணம்)

2-வது உலக இந்து மாநாட்டை ஒட்டி இன்று முற்பகல் 10மணிக்கு யாழ். திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் தேவார பாராயணம் பூசை வழிபாடு சைவ சமய அறிவுப் போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன.

# இந்து நிறுவனங்களுக்கு இன்று காசோலை கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று நல்லை ஆதீனத்தில் ஆரம்பமாகவுள்ள இரண்டாவது உலக இந்து மாநாட்டை ஒட்டிய யாழ். பிராந்திய மாநாட்டில் வைத்து யாழ். குடா நாட்டில் உள்ள ஆலயங்கள் பாடசாலைகள் உள்ளிட்ட 96 பொது நிறுவனங்களுக்கு, இந்து கலாசார அமைச்சினால் நிதியுதவிக்கான காசோலைகள் வழங்கப்படவுள்ளன.

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில்-12, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில்-10, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில்-15, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில்-9, நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்-5, உடுவில் பிரதேச செயலர் பிரிவில்-12, சங்கானை பிரதேச செயலர் பிரிவில்-14, ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவில்-3,கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில்-4,யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில்-6, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில்-2 என்ற அடிப்படையில் பொது நிறுவனங்களுக்கு இன்று காசோலைகள் கையளிக்கப்படவுள்ளன.

(உ)

# சக்திகிரீவனுக்கு தொடர்ந்து விளக்கமறியல்

(தென்மராட்சி)

கைதடி சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற முறைகேடு தொடர்பான வழக்கு விசாரணை நேற்று சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது.

இவ்வழக்கு விசாரணையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள இந்து சமயப் பேரவை செயலாளர் ரி. சக்திகிரீவன் உட்பட நான்கு பேரையும் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டாமென கொழும்பிலிருந்து வருகை தந்த சட்டத்தரணி இரத்தினவேல் நீதிபதியைக் கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து கைதிகள் அனைவரையும் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி க. அரியநாயகம் உத்தரவிட்டார். (த-77)

## அமை...

னும் அடுத்த வாரம் கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

(த-5)

## புலி...

யினர் வழிமறித்து சோதனை இட்டனர். அதில் வெடிபொருட்கள் இருந்தன. படகில் இருந்த வெடிபொருட்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டதுடன் படகில் சென்ற புலி உறுப்பினர்கள் மூவரில் இருவர் கைது செய்யப்பட்டனர். மற்றைய புலி உறுப்பினரும் படகும் விடுவிக்கப்பட்டது. இது தொடர்பாக கண்காணிப்புக் குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இராணுவப் பேச்சாளர் சரத்கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

(த-5)

G.A.Q., 1ST IN COM.
யாழ். பல்கலைக்கழகம் (வெளிவாரி)
வெளிமாவட்ட மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
புதிய பிரிவு ஆரம்பம்: 10.05.2003
பதிவுகள், நேர அட்டவணைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக்கொள்ளவும்.
விவரங்களுக்கு:
S. அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(C/6118)



2ம் உலக இந்து மகா நாட்டிற்கான வாழ்த்தும் இந்து தர்மமும்
இரண்டாம் உலகஇந்து மகாநாட்டு அமைப்பாளர் கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரன் அவர்களை வாழ்த்துவதோடு இம் நாட்டின் தீர்க்கதரிசனமாக இந்துக்கள் ஆகிய யாம் அனைவரும் இடங்கள் பசுக்கள் என்பவற்றை கொன்று உணவாக உட்கொள்வதை நிறுத்தி அவற்றை பாதுகாப்பதற்கான சரணாலயம் அமைக்க இறைவனின் திருவருள் கை கூட பிரார்த்தனை செய்து இந்துக்கள் அல்லாத மற்றைய மதம் சார்ந்தவர்களையும் இரு கரம் கூப்பி ஆவினங்களை அழிப்பதை நிறுத்துமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.
"யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை"
சிவதர்மவள்ளல் சி.சச்சிதானந்தம்
சச்சியா இருப்பகம்
வட்டுக்கோட்டை
(C/6117)

PATRICIAN INSTITUTES
பற்றீஷியன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்
தொழில்நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
ஆரம்பம்: 19 - 05 - 2003
மாணவர்களின் நன்மை கருதி COMPUTER COURSES உட்பட சகல பயிற்சி நெறிகளும் ஆரம்பம் ஆகின்றன என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
மேலதிக விபரங்களுக்கு
REGISTRAR
PATRICIAN INSTITUTES
59, ST. PATRICK'S ROAD
JAFFNA
(C/6116)

# அயல்நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து இலங்கையை பாதுகாக்க வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பிராந்தியங்களின் பாதுகாப்பினை அரசாங்கத்தினால் உறுதிசெய்ய முடியாது போனால் அண்டை நாடுகளுடன் இணைந்து ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ள வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பான விவாதம் நேற்றுப் பாராளுமன்றத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்த கருத்துக்கள் நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையவில்லை. நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஜனாதிபதி சந்திரிகா ஆரம்பித்த நடவடிக்கைகளை அரசு தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால் நாட்டின் ஒருமைப்பாட்டிற்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுதல், எதிரிகளைப் படுகொலை செய்தல் மற்றும் ஆயுதங்களை கொள்வனவு செய்தல் ஆகியவற்றை விடுதலைப்புலிகள் தொடர்ந்தும் செய்து வருகின்றார்கள் என்று கூறிய மகிந்த ராஜபக்ஷ கண்காணிப்புக் குழு உறுப்பினர்களை மாற்றுமாறும் கேட்டுக் கொண்டார்.

(வ)

## மரம் நாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்துமாநாட்டை ஒட்டி யாழ்ப்பாண பலநோககுக் கூட்டுறவுச்சங்க வளவில் ஞாபகார்த்த மரம் நாட்டுவிழா இன்று காலை நடைபெறவுள்ளது.

மரம் நாட்டு விழாவினையடுத்து சங்கப்பணியாளர்களின் பிள்ளைகளுக்கிடையிலான பண்ணிசைப் போட்டியும் இடம்பெறவுள்ளது.

(வ)

## கடற்புலிப்...

யாகவே இருப்போம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையை ஏன் தற்காலிகமான நிறுத்திவைத்தார்கள் என்ற விடயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு நன்கு தெரியும். முக்கியமான பிரச்சினைகள் சிலவற்றை அவர் மூடி மறைத்தே எமக்கு கடிதம் எழுதியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் கடற்புலிப் படையணி சுதந்திரமாக கடற்பரப்பில் நடமாடவேண்டும், மீனவர்கள் சுதந்திரமான முறையில் கடலில் மீன் பிடிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளோம் என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் நடுவப்பணியகத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற இப்பேச்சு வார்த்தைகளின் போது விடுதலைப்புலிகளின் சார்பில், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம், அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், கடல் புலிகளின் சிறப்புத் தளபதி கேணல் சூசை, சிறப்புத் தளபதி கேணல் பானு, வட முனைக் கட்டளை தளபதி கேணல் தீபன், திருமதி அடேல் பாலசிங்கம் மற்றும் பொருளாதார ஆலோசகர் யோஸ் மகேஸ்வரன் ஆகியோரும் நோர்வேயின் சார்பில் சிறப்புத் தூதுவர் எரிக் சொல் ஹேய்முடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹானஸ் பிரட்லசர் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத தலைவர் ட்ரிக்வே கெல்வ்சனும் கலந்துகொண்டார். (வ)

## தேசிய...

கூறவே முடியாதுள்ளது. இந்நிலையில் அந்த அறிக்கையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு மட்டும் நான் அனுப்பி வைத்துள்ளேன்.

சதீஸ் நம்பியாரின் இந்த அறிக்கை எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷாவுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளது. ஏனைய பாராளுமன்ற உறுப்பினர் அலரி மாளிகைக்கு வந்து அந்த அறிக்கையை வாசிக்கலாம்.

இந்த அறிக்கை தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு தெரிவுபடுத்துவதற்காக பத்திரிகை ஆசிரியர் சங்க தலைவர் மட்டும் அதனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படுவார்.

அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக யாழ் மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா சமர்ப்பித்த அறிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்த்ததாலேயே இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் அந்நாட்டின் முன்னாள இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சதீஸ் நம்பியாரை அழைககவேண்டிய தேவை ஏற்பட்டது.

சதீஸ் நம்பியாரின் இந்தச் சேவைக்காக அவருக்கு பணம் எதுவும் வழங்கப்படவில்லை. அவரது போக்குவரத்துச் செலவுக்காக சிறு தொகையை மட்டும் அரசாங்கம் செலவு செய்துள்ளது.

விடுதலைப்புலிகள் சமாதான முயற்சிகளிலிருந்து தற்காலிகமாக விலகியிருப்பதால் சதீஸ்நம்பியாரை வருமாறு அரசு அவசரமாக அழைத்தது என்று கூறிய பிரதமர் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளை தாம் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வோம் என்றும் கூறினார். (ம)

# மரண அறிவித்தல்கள்

## திரு. கந்தையா ஆறுமுகம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

(இலுப்பையடி ப்பிள்ளையார் அடியவர்)

கோப்பாயை பிறப்பிடமாகவும் மருதனார்மடம் இணுவிலை வாழ்விடமாகவும் தற்போது நல்லூரில் வாழ்ந்தவரும் ஆகிய திரு.க. ஆறுமுகம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்-நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை) 08-05-2003 வியாழக்கிழமை அன்று காலை இறையடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலம் சென்ற கந்தையா-செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் (ஓய்வுபெற்ற ஆசிரியை யாழ் .இந்துக் கல்லூரி ஆரம்பப்பாடசாலை) அவர்களின் அன்புக் கணவரும், ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி (அதிபர் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆ.குகமூர்த்தி (போதனாசிரியர் மருதனைத் தொழில் நுட்பக்கல்லூரி) திருமதி வ.குககுமாரி (ஆசிரியை யாழ் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை), திருமதி இ. கோணேஸ்வரி (ஆசிரியை யாழ். உடுவில் மான்ஸ் தமிழ் வித்தியாலயம்), திரு.ஆறுதிருமுருகன் (ஆசிரியர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி சுன்னாகம்) திருமதி ந. விக்னேஸ்வரி (விரிவுரையாளர் யாழ். தேசியக் கல்விக் கல்லூரி), திருமதி ஆ. கேதீஸ்வரி (ஆசிரியர் யாழ். இராமநாதன் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும்,

திரு. மு. விஜயரகுநாதன் (கணக்காளர் யாழ். போதனா வைத்தியசாலை), திரு. ஆ. இராமச்சந்திரன் (முதன்மை ஆசிரியர் வலிகாமம் கல்வி வலயம்), திரு. இ. நரேந்திரா (ஆசிரியர் யாழ். உரும்பிராய் இந்துக் கல்லூரி), திரு. சி. ஆனந்தரட்ணம் (இலங்கை வங்கி மன்னார்), காலஞ்சென்ற திருமதி ஸ்ரீ ஞானலஷ்மி (ஆசிரியை), திருமதி. சசிகலா குகமூர்த்தி (ஆசிரியை கொழும்பு விவேகானந்தக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்வி வி. லாவண்யா (மாணவி யாழ். தேசிய கல்விக் கல்லூரி), ஸ்ரீ விசாகன், ஸ்ரீ வித்தகன் (மாணவர்கள் யாழ். இந்துக் கல்லூரி), இ. கேதுஷா (மாணவி வேம்படி மகளிர் கல்லூரி), ந. உசேனி (மாணவி யாழ். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), பு. தாயினி (மாணவி கொழும்பு இந்து மகளிர் கல்லூரி), விசாதரன் (மாணவன் கொழும்பு. இந்துக் கல்லூரி), கு. வேதப்பிரியன் (மாணவன் றோயல் கல்லூரி கொழும்பு), ஆ. விதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும்,

காலஞ்சென்ற இணுவில் பொன்னைபா செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான திரு. க. சின்னத்தம்பி திரு. க. இராமுப்பிள்ளை (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சோதரரும் காலஞ்சென்றவர்களான இணுவில் பொ. சுப்பையா, பொ. வீரசிங்கம், பொ. இலங்கநாதன், பொ. அம்பலவாணர் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல. 28, நல்லூர் கைலாய பிள்ளையார் கோவில் வீதி இல்லத்தில் 9-5-2003 வெள்ளிக்கிழமை பி.ப 3மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

**இல. 28, கைலாய பிள்ளையார் கோவில் வீதி,**
**நல்லூர்**
**யாழ்ப்பாணம்**
தொலைபேசி இல: 021-2223452

தகவல்
ஆறுமுகம் குடும்பத்தினர்

(C/6118

## ஐயாத்துரை - குலசிங்கம்

(உரிமையாளர் - குலம் கிறீம் ஹவுஸ்)

**மானிப்பாய், யாழ்ப்பாணம்**

ஊர்காவறதுறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை குலசிங்கம் அவர்கள் புதன் கிழமை 07-05-2003 அன்று காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சிவயோகம் தம்பதிகளின் அன்புப்புதல்வனும், செல்வராணியின் அன்புக்கணவருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆலடிச் சந்தி
மானிப்பாய்

தகவல்
மனைவி கு. செல்வராணி

(C/6113)

இப் பத்திரிகை வலம்புரி அச். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.